

# ஞானச்சுடர்

சித்திரை

மலர் 2008




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள்வழி



**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு**
**-அல்லால்**

**மனக்கவலை மாற்ற லரிது.**

பொருள்: கடவுளை நினையாதவர்களுக்கு மனத் துன்பம் நீங்க மாட்டாது (7)

**அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்த லரிது.**

பொருள்: அறக்கடலாகிய கடவுளின் பாதங்களை அடையாத வருக்குப் பாவக்கடலை நீந்துதல் அரிது. (8)



## நற்சிந்தனை

## நூதனமொன்றுமில்லை

## ஆசிரிய விருத்தம்

அறிகுதி ய றிவி னாலே யறிகுதி தன்னை யென்றான்
பிறிவற நின்று பார்த்தாற் பிரமமே நீயும் நானும்
குறிகுண மொன்று மின்று கூடுதல் பிரிதெ லின்று
செறிதரு முயிர்க ளென்று செப்புதற் கொன்று மின்றே 3

இன்றென நாளை யென்றே எண்ணுதற் கிடனோ வில்லை
அன்றுசெய் வினையி னாலே அவனியிற் பிறந்தோ மென்று
கன்றினைப் பிரிந்த கற்றாக் கடுப்பவே கதறு கின்றோம்
மன்றினின் றாடு மீசன் மலரடி வழுத்து வோமே 4




வெளியீடு - 2 சுடர் - 124

# 2008 சித்திரை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பிரதோஷ விரதம் | வல்வையூர் அப்பாண்ணா | 1 - 3 |
| திருப்புகழ் அருளிய அருணகிரி...... | நீர்வை மணி | 4 - 5 |
| பிள்ளைக்கவி வ. சிவராசசிங்கம்.... | க. நாகேஸ்வரன் | 6 - 8 |
| வந்திப்பவர் பந்தம் அறுத்துப்..... | சிவ. சண்முகவடிவேல் | 9 - 10 |
| பிறவி எனும் சுழல் | இ. சாந்தகுமார் | 11 - 12 |
| காலத்தின் தேவை | இரா. செல்வவடிவேல் | 13 - 16 |
| தமிழ்க் கடவுள் யார்? | திருமதி சி. ஜனகா | 17 - 19 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவ மகாலிங்கம் | 20 - 24 |
| உண்மையே உனை உயர்த்தும் | இ. ஸ்ரீதரன் | 25 - 27 |
| இறப்பை எண்ணி | திருமதி சி. யோகேஸ்வரி | 28 - 30 |
| அன்பின் வழியது உயிர்நிலை | நா. நல்லதம்பி | 31 - 34 |
| ஆச்சிரமக் கோட்பாடு | சி. நற்குணலிங்கம் | 35 - 36 |
| மண் சுமந்த மேனியர் | வாரியார் சுவாமிகள் | 37 - 39 |
| அருணகிரிநாதர் அருளிய.... | ம. மயூரன் | 40 - 41 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 42 - 44 |
| வாசகர் உள்ளத்திலிருந்து | | - 45 |
| பூவும் பூஜையும் | ப. அருந்தவம் | - 46 |
| திருவானைக்கா | | 47 - 48 |


**அன்பளிப்பு:-**

**மலர் ஒன்று 30/= ரூபா**

**வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599**

**பதிவு இல. Q.D./60/NEWS/2008**

**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

# ஞானச்சுடர்
# பங்குனிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

123ஆவது மலருக்கான வெளியீட்டுரையினை யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய அதிபர் திரு வ. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள். இம்மலரை வெளியீடு செய்வதற்கு முருகப்பெருமானின் திருவருள் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு இங்கே இடம்பெறும் பணிகளில் மிகவும் முக்கிய பணியாகக் கருதப்படும் ஞானச்சுடர் வெளியீடு அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளமை பற்றியும், இம்மலரில் ஆன்மீக தத்துவக் கருத்துக்கள் சிறப்பாக அமைந்துள்ளது எனவும், ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் முருகப்பெருமானின் புகழ், பெருமை சொல்லில் அடங்காது எனவும் அவர் ஆரம்ப உரையில் குறிப்பிட்டிருந்தார்கள்.

இம்மலரில் காணப்படுகின்ற கட்டுரைகள் ஒவ்வொன்றும் உயர்தர மாணவர் கள் பயன்பெறத்தக்க வகையில் அறிவு சார்ந்த கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது. அவ்வகையில் இம்மலர் அனைவராலும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய மலராக அமைகின்றது. ஆகவே இம்மலர் தொடர்ந்து வெளிவந்து சைவ மக்களிடையே சிறப்புற்று விளங்க இறைவனின் திருவருள் கிடைக்கவேண்டுமெனக் கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

## மதிப்பீட்டுரை:

ஞானச்சுடரின் 123ஆவது மலருக்கான மதிப்பீட்டுரையினை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அதிபரும், ஆச்சிரம வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குபவருமாகிய திரு ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர்தம் உரையில் இவ்வாச்சிரமம் அற்புதமான பணிகளைச் செய்கின்றபோதும், சைவப் பணியை ஊக்குவிக்குமுகமாக சமூகத்திற்கு ஆற்றும் சேவையைப் போற்றுவதோடு இவ்வகைப் பணிகள் சிறப்புற அமைவதற்கு சந்நிதி வேலவது அருளாட்சி பூரணமாகக் கிடைத்துள்ளதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

இம்மலரில் காணப்படும் கட்டுரைகள் இந்து மதத்தின் பெருமைபற்றியும், மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்ற நற்சிந்தனைகள் பற்றியும் எடுத்துக் கூறுவதோடு ஆரம்பகாலந்தொட்டு இற்றைவரைக்கும் பல பரிமாண வளர்ச்சிகளை கண்டுள்ளதையும் காணமுடிகிறது. இறுதியாக அதிபர் அவர்கள் மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் கருத்தாளங்களை சபையிலுள்ள அடியார்களுக்கு விளக்கிக்கூறி தனது மதிப்பீட்டுரை யினை நிறைவுசெய்தார்கள்.

# சுடர் தரும் தகவல்

## கடவுள் சுவாமிகளின்103ஆவது ஜெயந்திதின விழா

**அன்புடையீர்!**

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"**

நிகழும் சர்வதாரி வருடம் சித்திரைமாதம் 15ம் நாள் (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை சிவஸ்ரீ முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின்

(மோனகுரு) 103ஆவது ஜெயந்திதின விழா தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் சுவாமிகளின் அருட்பிள்ளைகள், அன்பர்கள், அடியார்களால் கொண்டாட இருப்பதால் அத்தருணம் யாவரும் வருகை தந்து சுவாமிகளின் அருளாசி பெற்று உய்யுமாறு அன்பால் அழைக்கின்றோம்.

காலை 8மணி:- செல்வச்சந்நிதி வேல் முருகனுக்கு விஷேட அன்னாபிஷேகம்.

காலை 10மணிக்கு:- சுவாமிகளின் தகரமட வாசல் தலத்தில் பூசை, பஜனை, பிரார்த்தனை, ஆத்மீக சொற்பொழிவு என்பன நடைபெறும்.

**தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் மாகேஸ்வரபூசை நடைபெறும்.**

***கடவுள் சுவாமிகளின் அடியார்கள்.***

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க. இல. 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| T.P.No: 021- 2263406 | பருத்தித்துறை. |
| : 060- 2219599 | |

**www. sannithiyan. org**

உ

# அன்பின் அடியார்களே

சின்னச் சின்னப் பாலமுருகனை - போற்றும்
செல்வச் சந்நிதிச் சிவகுமாரனை
வண்ணச் சிலம்பு தண்டை சதங்கை - ஒலிக்க
வந்திடென்றால் ஓடிவருவனே
பின்னர் உமக்கு வேண்டுவ தெல்லாம் - நோக்கிப்
பிரானவனை உள்ளத் திருத்தின்
பென்னம் பெரிய வரங்கள் கேட்டாலும் - அவன்
பின்னிற்பனோ எல்லாந் தருவனே.

பாலாபிஷே கத்தைச் செய்யுங்கள் - பணிந்து
பன்னீர் இளநீ ராலே ஆட்டுங்கள்
சாலப் பாகு முக்கனியுங் கனியச் - சேர்த்துப்
பலபஞ்சா மிர்தத்தா லாட்டுங்கள்
மாலான் மருகன் சந்நிதியானை - மலைமேல்
மகிழ்ந்தாடும் குறிஞ்சிக் குமரனை
வேலனைப்பட் டுடை யுடுத்தே - நெற்றியில்
விபூதி திலகம் சிக்தூரம் அணியுங்கள்.

பாலனாக எண்ணியவனை - அமுது
பழமோ தகம் படையலுமிட்டே
சாலவும் ஆரத்தி காட்டியே - மலரிட்டுச்
சார்ந்து நாமார்ச் சனை புரியுங்கள்
வேலை கேட்டால் வேலை தருவான் - மனத்தில்
வேதனையையும் போக்குவான்
சீலனைச் சிவ சுப்ரமணியனை - கண்ணால்
செல்வச் சந்நிதி சென்று பாருங்கள்.

கந்தா முருகா என்று கூவுங்கள் - கேட்டுக்
காட்சிதர ஓடி வருவான்
சிந்தை யேதும் மாறுபட் டாலோ - அவன்
தேடினாலும் ஓடி விடுவானே
வந்தனையால் வெற்றியடையலாம் - நீவிர்
வாடிடாமல் சுற்றிப் போற்றியே
எந்த நாளும் நம்பிப் பணிந்தால் - சந்நிதி
ஈசன்மகன் கைவிடமாட்டான்.

*முதுபெரும் புலவர்*
*கலாபூஷணம் ஆசிரியர்*
*வை.க. சிற்றம்பலவனார்.*

# வருடாந்த வைகாசிப் பெருவிழா- 2008

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் வருடாந்த வைகாசிப் பெருவிழா எதிர்வரும் 16.05.2008 வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

வழமைபோன்று அன்று காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறும்.

சிறப்பு நிகழ்வுகளின் வரிசையில் **பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் சொற்பொழிவும், யாழ் இராமநாதன் கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்வுகளும்** அதனைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தால் நடாத்தப்பட்டுவரும் சமூகப் பணிகள் வகையில்

- **துவிச்சக்கரவண்டி வழங்குதலும்**
- **முன்பள்ளிகளுக்குரிய கற்றல் உபகரணங்களும்**

வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறும். இறுதியாக அறுபத்து மூவர் குருபூசையுடன் விழா இனிது நிறைவுறும்.

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

திரு சி. கணபதிப்பிள்ளை
(பெருமாள் கோவில் யாழ்ப்பாணம்)

திரு N. கதிர்காமநாதன்
(கொழும்பு)

திரு இ. ஜெயபாலன்
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)

திரு உதயசங்கர்
(முகாமையாளர் மக்கள்வங்கி திருகோணமலை)

திரு வே. பார்த்தீபன்
(மக்கள் வங்கி பிரதேச அலுவலகம் திருகோணமலை)

திரு ப. பார்த்தீபன்
(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி திருகோணமலை)

திரு ம. பிறேம்குமார்
(மக்கள் வங்கி பிரதேச அலுவலகம் திருகோணமலை)

திரு நா. உமாசங்கர்
(கயூரி வீடியோ விஷன் அச்சுவேலி)

திரு பொ. பாலசிங்கம்
(புத்தமேனி அச்சுவேலி)

திரு சி. நடேசமூர்த்தி J.P
(ஆஸ்பத்திரிவீதி அச்சுவேலி)

திருமதி மாதர்க்கரசி பொன்னுத்துரை
(சிவசக்திகோவிலடி அச்சுவேலி தெற்கு அச்சுவேலி)

திரு சி. கனகசபாபதி
(சிவன்கோவிலடி ஆவரங்கால் புத்தூர்)

திரு ம. குலநாதன்
(நாதன் கராஜ் ஆவரங்கால் புத்தூர்)

திரு வீரையா சிவஞானம்
(நவக்கிரிமேற்கு புத்தூர்)

திரு க.கு. கிருபாகரராசா
(பிரதானவீதி ஆவரங்கால்)

திரு ச. கனகராசா
(துஷி மினிசினிமா ஆவரங்கால்)

திரு ச. மகாதேவன்
(ஜெயந்தி என்ரபிறைஸ் ஆவரங்கால்)

டாக்டர் S. யோகேந்திரன்
(பொறுப்பதிகாரி, மத்திய மருந்தகம் தம்பிலுவில்)

தலைவர்
(சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)

திரு நா. குகன்
(குகன் ஸ்டுடியோ பருத்தித்துறை)

திரு சோ. பாலேந்திரன்
(பாலன் விற்பனை நிலையம், பருத்தித்துறை)

திரு இ. மனோகரன்
(மனோ லைற் கோப்பாய்)

திரு தா. முத்துவேலு
(சந்நிதி வீதி உடுப்பிட்டி)

திரு அ. தவராசசிங்கம்
(களஞ்சியப்பொறுப்பாளர் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

திரு சி. விபுலானந்த அடிகள்
(லிகிதர் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

திரு கு. மாணிக்கராசா
(கிளை முகாமையாளர் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

திரு ந. ஜெயக்குமார்
(விற்பனையாளர் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

திரு சி. நந்தகுமார்
(வங்கி ஊழியர் உரும்பராய்)

உரிமையாளர்
(உமாபதி தொலைத்தொடர்பகம் உரும்பராய்)

திரு சு. ஸ்ரீஸ்கந்தாரம்
(தபாலதிபர் புன்னாலைக்கட்டுவன்)

திரு கு. லோகேந்திரன்
(மில் ஒழுங்கை மல்லாகம்)

திரு இ. அருந்தவராசா
(விற்பனையாளர் வாசிகசாலையடி உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

திரு வீ. கிருஸ்ணராசா
(ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி)

திரு க. பாலசுப்பிரமணியம்
(பதிவாளர் இமையாணன்)

திருமதி சிவராஜா
(நல்நடத்தை உத்தியோகத்தர் கல்வியங்காடு)

திரு இராசையா சற்குணதாஸ்
(ஊரெழு கிழக்கு சுண்ணாகம்)

திரு N. ஜெயா
(பஞ்சுகடை சிவன் வீதி உரும்பராய்)

திரு இ. விஜயகருணா
(விதுரன் மோட்டோர்ஸ் ஆவரங்கால் புத்தூர்)

திரு செ. அமிர்தசாகரன்
(அம்பாள் மோட்டோர்ஸ் ஆவரங்கால்)

உ

# பிரதோஷ விரதம்

**வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்**

சிவனுக்கு உகந்த பிரதோஷ வேளையில் சிவனை வழிபடுவது விசேட மானது என ஆகம சாத்திரங்கள் கூறுகின் றன. 'தோஷம்' என்றால் குற்றம் என்று பொருள் படுதலால் "பிரதோஷம்" என்றால் குற்றமில்லாதது என்றும், குற்றமற்ற இப்பொழுதில் இறைவனை வழிபடுதலால் நமது தோஷங்கள் நீங்கும் என்றும் பெரி யோர் கூறுவர். இதைவிட 'பிர' என்பது 'முதல்' எனவும் தோஷம் என்பது 'இரவு' என்றும் வடமொழியில் பொருள் கூறப் படுவதால் 'பிரதோஷம்' என்கிற வட சொல்லுக்கு "இரவுக்கு முந்திய விரதம்" என பொருள் கொள்வாரும் உளர்.

ஒவ்வொரு மாதமும் அமாவாசை யிலிருந்து 13ஆம் நாளும், பௌர்ணமி யிலிருந்து 13ஆம் நாளும் வரும் திரயோ தசித்திதி பிரதோஷநாள் ஆகும். பிர தோஷ காலம் என்பது பகலும் இரவும் சந்திக்கும் நேரமாகிய "உஷத்காலம்" காலம் ஆகும். இது சுமார் 4.30 மணி முதல் இரவு 7.30 மணிவரை உள்ள பொழுதாகக் கொள்ளப்படும். இதில் பி.ப. 4.30 தொடக்கம் மாலை 6.00 மணிவரை உள்ள நேரம் தரிசனத்துக்கு மிக உகந்த தாம். இதன்படி தினந்தோறும் மாலையில் வருவது பிரதோஷம்தான் என்றாலும், மாதத்தில் இரண்டு திரயோதசித் திதி களில் இருட்டுவதற்கு ஒன்றரை மணி நேரத்துக்கு முன்பு ஆரம்பித்து இருட்டும் வரை உள்ள பிரதோஷ காலமே உத்தம மானது என்று கொள்ளப்படுகிறது.

ஒருநாளின் உதயம் முதல் அடுத்தநாள் உதயம்வரை திரயோதசி இருந்தால் அந்தப் புண்ணிய காலம் உத்தமமான பிரதோஷம் ஆகும். உதயம் முதல் இருட்டும்வரை திரயோதசி இருந் தால் அது மத்திமமானது ஆகும். அன்றைய தினம் திரயோதசித்திதி சரி யாக மாலை 5 மணிவரை இருந்தால் அந்த நாள் அதமமான பிரதோஷம் எனக் கூறப்படுகிறது. முதல்நாள் மாலை 5 மணிக்கு மேல் திரயோதசி ஆரம்பித்து அடுத்தநாள் 5 மணிவரை இருந்தால், அந்தத் தினங்களில் இரண்டாவது நாளே பிரதோஷ தினமாகும். இரவில் மட்டும் திரயோதசித்திதி இருந்தால் அந்த நாளில் பிரதோஷ விரதம் அனுட்டிக்கக்கூடாது.

பிறைசூடிய சிவனுக்குச் சோம வார வழிபாடு சிறப்பு என்பதால் திங்கட் கிழமை வரும் பிரதோஷத்தைச் "சோம பிரதோஷம்" என்பர். சிவன் விஷமுண்டு சயனித்து எழுந்து ஒரு சனிக்கிழமை மாலையில் முதன்முதலாக "சந்தியா தாண்டவம்" ஆடியமையால் "சனிப்பிர தோஷம்" மிகச்சிறப்பானது. திரயோதசி நாட்களில் வருவது "பட்சபிரதோஷம்" என்றும், மகாசிவராத்திரிக்கு முன் தினம் வருகிற பிரதோஷத்தை "மகாபிரதோஷம்" எனவும் கூறுவர். மகாபிரதோஷம் ஒரு சனிக்கிழமை வருமாயின் "சனிமகா பிரதோஷம்" எனப்படும். இது ஆயிரம் மடங்கு பலன் தருவதாகும். பிரதோஷ விரதம் தொடங்குபவர்கள் ஒரு சனிப் பிரதோஷ நாளில் விரதத்தை ஆரம்பிப் பது சாலச் சிறந்தது.

விடமுண்ட கண்டத்தினன் விடத்தை உண்டு, சயனித்து, எழுந்து

**குடும்பத்திலிருந்துகொண்டு இறைவனை அழைப்பவன் வீரபக்தன் ஆவான்.**

அம்பிகை காணுமாறு "சந்தியா தாண்டவத்தை" (பிரதோஷ நடனம்) ஆடியபோது தேவர்கள் அதிலேயே லயித்துச் செயலற்று நின்றதால் வாத்தியம் எதுவும் வாசிக்கப்படவில்லை. நந்தியம்பெருமான் மட்டும் மத்தளத்தைத் தொடர்ந்து வாசித்தார். இதனால் கிடைக்கப்பெற்ற எல்லையில்லா ஆனந்தத்தில் நந்தியம்பெருமானின் உடல் பருத்துக் கைலாயமே மறைக்கப்பெற்றது. அதனால் இறைவனின் திருநடனக் காட்சியைத் தேவர்கள் நந்தியம்பெருமானின் இரு கொம்புகளுக்கிடையேயுள்ள இடைவெளியில் மட்டுமே பார்க்க முடிந்தது. அதனாலேயே பிரதோஷ விரதிகள் இடபதேவரின் கொம்புகளுக்கூடாகச் சிவலிங்கத்தைத் தரிசிப்பதன்மூலம் ஆனந்தக் கூத்தனின் அருட்பிரவாகத்தை இலகுவில் அடையலாம்.

பிரதோஷ காலத்தில் மட்டும், வழக்கமாக வலம்வருவதுபோல ஆலயப் பிரதட்சணம் செய்தல் ஆகாது. வலப்பிரதட்சணமாகவும், இடப்பிரதட்சணமாகவும் வலம்வரும் இம்முறைக்குச் "சோம சூத்திரப் பிரதட்சணம்" என்று பெயர்.

ரி- ரிஷபம்
ச- சண்டிகேசுவரர்
கோ- கோமுகை

ரி ச ரி கோ
ரி ச கோ
ரி ச ரி

மேலே உள்ள குறி எழுத்துக்கள் ஒரு முறை வலம்வரும் "சோம சூத்திரப் பிரதட்சணத்தை"க் குறிக்கின்றன. அதாவது, இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்று இடமாகச்சென்று சண்டிகேசுவரரைத் தரிசித்துப் பின் சென்ற வழியே திரும்பிவந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, கோமுகையைக் கடவாது, முன்சென்ற வழியே திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டிகேசுவரரைத் தரிசித்து, அங்கு நின்று திரும்பி, இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று கோமுகையைச் சேர்ந்து அங்கு நின்றும் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து இடமாகச் சென்று சண்டிகேசுவரரைத் தரிசித்துத் திரும்பிவந்து இடபதேவரைத் தரிசித்து அவருடைய இரண்டு கொம்பின் ஊடாகச் சிவனைத் தரிசித்து வணங்குதல் வேண்டும். இதேபோல மூன்று முறை "சோம சூத்திரப் பிரதட்சணம்" செய்தல் வேண்டும். இவ்வாறு செய்பவர்கள் அனைத்துச் செல்வங்களையும் முறையாகப் பெறுவதோடு தங்கள் பாவச் சுமைகளையும் குறைத்துக்கொள்வர்.

பிரதோஷ காலத்தில் வரும் உற்சவமூர்த்தி "பிரதோஷ நாயகன்" எனப்படுவார். இந்த மூர்த்தி சந்திரசேகரரைப் போன்ற தோற்றத்துடன் பின்னிரு கரங்களில் மான்- மழுவு கொண்டவராக முன்னிரு கரங்களில் அபய- வரத முத்திரை தாங்கியவராக, நின்ற நிலையில், எல்லையில்லா மகிழ்ச்சி பொங்கும் முகத்துடன் காட்சி தருவார். அவரின் இடதுபுறத்தில் அம்பிகை தன் வலது கரத்தில் நீலோத்பவ மலர் ஏந்தி, இடது கரத்தைத் தொங்கவிட்டவாறு அருள் தருவார்.

பச்சரிசி, பயற்றம்பருப்பு இவற்றினை நீரில் ஊறவைத்துத் தேங்காய்த்

துருவல் வெல்லம் சேர்த்துப் பிசைந்து நிவேதிக்கும் "காப்பரிசி" பிரதோஷ காலத்தில் அனைவருக்கும் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

உள்ளன்போடு விரதமிருப்பவர்கள், பயவுணர்வு, அச்சம், குழப்பம் ஆகியவை நீங்கப்பெற்றுத், தீராப்பிணி மறைந்து, மனநலம்- உடல் நலம்- வாக்கு நலம் பெற்று நிறைந்த வாழ்வு பெறுவர்.

உலக உயிர்கள் உய்யும் பொருட்டுக் கொடிய விஷத்தைத் தானுண்டு தேவர்களுக்கு அமிர்தத்தை வழங்கிய வள்ளலின் சிறப்பைப் போற்றும் நாளாகிய பிரதோஷத்தின் மகிமையை அனைவரும் உணர்ந்து ஈசனை நினைந்து நல்வாழ்வு பெறுவோமாக.

## பரம்பொருள்

வேதங்கள் உபநிடதங்கள் எதைப்பற்றிப் பேசுகின்றனவோ தவத்துக்கெல்லாம் குறிக்கோளாக இருப்பது எதுவோ எதை அடைவதற்காக மனிதர்கள் துறவு பூணுகிறார்களோ அதை ஒரே வார்த்தையில் சொல்லுவதாயின் அதுதான் ஓம் என்னும் பரம்பொருளாகும்.

உடலில் இருந்து உயிர் பிரிந்தபின் என்ன நடக்கிறது. ஞானபரமான அந்த ஆன்மா பிறப்பு, இறப்பு அற்றது. மனிதர்களும், மிருகங்களும் வேதாந்த தத்துவத்தில் ஒரேபொருள் ஆன்மாதான். அது நல்லதாகவும், தீயதாகவும் இருக்கிறது. குளிர்காலத்தில் இதமளிக்கும் தீ எம்மை அழிக்கவும் செய்கிறது. ஆன்மா தூய்மையானது முழுமையானது. ஆன்மா கொல்லப்படுவதில்லை. அது அணுவிலும் அணுவாகவும் பெரியதில் பெரியதாகவும் உள்ள பரம்பொருள். இன்ப துன்பங்களைக் கடந்து மாசற்று இருப்பவர்கள் பரம்பொருளின் கருணையால் ஆன்ம தரிசனம் பெறுகிறார்கள். யாருடைய இதயத்தில் உண்மை இருக்கின்றதோ, புலன்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்றனவோ அவருக்குத்தான் பரம்பொருள் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும்.

உடலைத் தேராகவும், ஆன்மாவை அந்தத் தேரில் ஊர்பவராகவும், அறிவைத் தேரோட்டியாகவும் மனத்தைக் கடிவாளமாகவும், புலன்களைக் குதிரைகளாகவும் கொண்டால், மனத்தை உறுதியாகவும், தூய்மையாகவும் பக்குவமாகவும் வைத்திருப்பவனே பரம்பொருளை உணரமுடியும். ஐம்புலன்களின் இயக்கத்தைக் கடந்து ரிஷிகளே ஆதியும் அந்தமுமில்லாத எல்லையற்ற பரம்பொருளை உணர்வர். மரணத்தின் பிடியிலிருந்து விடுதலை பெறுவர். கூர்மையான கத்தி முனையில் நடப்பது போன்றதே இப்பாதை. இது அபாயங்கள் நிறைந்ததாகும். முடியாது என்று பயந்து விடாதீர்கள். இந்தப்பூமி எப்பொழுதும் இப்படியேதான் இருக்கும். இன்ப துன்பங்களும் இருக்கவே செய்யும். ஆசை காரணமாக நாம் ஒருவரை ஒருவர் ஏமாற்றுகின்றோம். அதனால் தேசங்கள், நகரங்கள் அழிந்து போகின்றன. இவை கூட்டல், பெருக்கல் விகிதத்தில் அதிகரிக்கின்றன. சமுத்திரத்தில் ஓர் அலை எழுந்தால் அது மற்றோர் இடத்தில் தாக்கத்தை உண்டாக்குகிறது. சுனாமி அடிக்கடி ஏற்பட்டபோதும் கூட மனிதர்கள் பக்குவம் அடையவில்லை. மரணபயம் இருந்தும் மனிதர்கள் பரம்பொருளைத் தேடும்நிலை எப்போது?

"பரம்பொருள் இருக்கப் பயமேன்?"

*-திரு க. கனகராசா அவர்கள்-*

**அகங்காரம் அடியோடு நீங்காவிட்டால் இறைவனை அடைய முடியாது.**

உ

# திருப்புகழ் அருளிய அருணகிரிநாதரும் திருமுறை அருளிய சமயகுரவர் நால்வரும் தமிழ்ப்பாமாலை சூடி இறையருள் பெற்றோரே

**திரு நீர்வைமணி அவர்கள்**

திருப்புகழ் அருளிய அருணகிரி நாத சுவாமிகளும் திருமுறை பாடியருளிய சமயகுரவர் நால்வரும் பல்வேறு விதத் திலும் ஒற்றுமையுடையவர்களாகக் காணப் படுகின்றனர். இவர்களது வழிபாட்டு முறை களும், இவர்களுக்கு இறைவன் அருள் பாலித்த விதமும், இவர்கள் இறைவனிடம் செய்த முறையீடுகளும், இவர்கள் செய்த பரந்துபட்ட உபதேசங்களும் அற்புதங்கள் பலவும் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்போது இவையாவற்றுள்ளும் பற்பல ஒற்றுமை களும், இறைசிந்தனைகளும் பலவித நயங்களும் சிறப்பாகக் காணப்படுவதை நாம் கவனத்திற்கொள்வதன்மூலம் நன்கு அறியலாம்.

**இறைவன் ஒரு தமிழ்ப் பிரியர்:** முருகப்பெருமான் அருணகிரிநாத சுவாமி களுக்கு, தமிழில் "முத்தைத்தரு" என அடியெடுத்துக் கொடுத்ததும் "வேலும் செஞ்சேவலும் செந்தமிழாற் பகரார்வம்" எனக் கந்தரலங்காரம் 52ஆம் பாடலில் காணப்படுவதும்,

சிவபிரான் சுந்தரருக்கு "சொற் றமிழ் பாடுக" என்றதும் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று சுந்தரர் பாடியிருப்பதும் இறைவன் தமிழ்ப் பிரியர் என்பதை எடுத்துக்காட்டு வனவாம்.

மேலும் சுந்தரர், சம்பந்தரை "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர்" எனவும், அப்பர் ஆகிய திருநாவுக்கரசு சுவாமிகள் சம்பந்தரைச் "செந்தமிழ் உறப்பப்பாடி அடைப்பித்தார் எனவும் எடுத்தாண்டிருப்பதும் இறைவன் தமிழ்ப்பற்றுடையவர் என்பதைத் தெளி வாக எமக்கு விளங்க வைப்பதாக உள் ளது. மேலும் மாணிக்கவாசக சுவாமி களும் திருவாசகத்தில் "தண்ணார் தமிழளிக்கும் தன்பாண்டி நாட்டாரை" என எடுத்துக் கூறியிருப்பதும், இறைவன் தமிழ்ப்பற்றாளர் என்பது சிறப்பாக எமக்கு விளக்குவதாயுள்ளது. இவற்றை நாம் எடுத்துநோக்கும்போது இறைவழி பாட்டிற்குச் சமயக்குரவர் நால்வரும், அருணகிரிநாத சுவாமிகளும் தமிழா லேயே பாமாலைகள் சூடி வழிபாடுகள் செய்ததுடன் தமிழ் வழிபாட்டின் மேன் மையை என்றும் நாம் உணரவும் வைத்துள்ளனர் எனலாம். "தமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன்" எனவரும் அடிகளும் சிந்திப்பதற்குரிய தாகும்.

மேலும் இராவணனுடைய இசைக்குச் சிவபிரானே மனநெகிழ்ந்தார் என்பதும், ஏழிசை வகுத்தவர் எம்பெரு மானே என்பதும் தேவாரப் பதிகங்களி லிருந்து நாம் அறியமுடிகின்றது. சிவ குமாரனாகிய முருகப்பெருமானையும் இராகவினோதா எனவும் இசைப்பிரியர் எனவும் அருணகிரியாரும் எடுத்துக் கூறி யுள்ளதுடன் இசைப்பாடலாகத் திருப்புக ழும், திருவகுப்பும்பாடி வழிபட்டிருப்பதும் காணக்கூடியதாகவுள்ளது.

சம்பந்தருக்கு ஞானப்பால்

கொடுத்து எம்பிரானும் தேவியுமாகத் தம் குழந்தையாக ஏற்றுத் "தோடுடைய செவி யன் எனப் பதிகம் பாடவைத்தமை பற்றி யும், திருநாவுக்கரசு சுவாமிகளுக்குச் சூலநோயைக் கொடுத்துத் தண்டித் தமையும், சுந்தரரைத் தோழனாகக் கொண்டு தூதனுப்பியமையும், மணி வாசகப் பெருமானைச் தம் சீடனாகக் கொண்டு ஆட்கொண்டமையும்போல, முருகக் கடவுளும் அருணகிரிநாதரைப் பலவிதமாக ஆட்கொண்டமை "எந்தாயும் எனக்கருள் தந்தையுநீ" எனவும் "எமக் கமிர்த தோழா கடப்பமலர் அணிவோனே" எனவும் வரும் அருணகிரியார் வாக்குக்கள் மூலம் நாம் நன்கு அறியமுடிகின்றது.

மேலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகைப் பாதங்கள் மூலமும் சமய குரவர் நால் வரும் நற்பேறடைந்தமை போன்றே அருண கிரிநாத சுவாமிகளும் இந்நான்கு மார்க் கங்களையும் பற்றி முருகப்பெருமானை வழிபட்டமை நன்கு அறியக்கூடியதாக வுள்ளது. வழிபாட்டின் சிறப்பினால் சம்பந்தப் பிள்ளையார் இறைவனிடம் பொற்றாளம் பெற்றதும், அருணகிரிநாத சுவாமிகள் இறைவனிடம் ஜெபமாலை பெற்றதும் இவர்களுடைய பக்திநெறியின் சிறப்பை எமக்குச் சிறப்பாக அறிவுறுத்து வதாயுள்ளன.

மேலும் சமயகுரவர் நால்வரும் செய்த அற்புதங்களும், அருணகிரிநாதர் புரிந்த அற்புதங்களும் இறைவன்மேல் எத்துணை பக்திமேலீட்டினை உடையவர் கள் என்பதையும், இவற்றை நன்கு அறியும்போது எமக்கும் இறைநம்பிக்கை யையும், பக்தியையும் நன்கு ஊட்டுவன வாகவும், உணரவைப்பனவாகவும் விளங்குவதனைக் காணலாம்.

"வாழியசீரார் திருப்புகழ் நூல்இம் மண்ணுலகில்
வாழியஅந்நூல் படித்துமகிழும் அடியரெலாம்"

எனவும்,

நால்வர் சொல் நல்லுப தேசமெல்லாம் நம் அருணகிரி
நூலில் உளவென்னும் உண்மையைக் கண்டந் நூலதனை
சாலப்பயின்றுளர்,

எனவரும் அடிகளும் சமயகுரவர் நால்வரது திருமுறைகளும், அருணகிரி நாத சுவாமிகளின் திருப்புகழ்ப் பாக்களும் இம்மண்ணுலகோர்க்கு எத்துணை இறை நம்பிக்கையையும், பக்திநெறியையும் வளர்க்க உதவுவன என்பதை நாம் நன் குணர வைப்பனவாயுள்ளன அன்றோ.

எனவே தேவாரத் திருமுறைகளை யும், அருணகிரியாரின் அற்புதமான பக்திப் புகழ்ப்பாக்களையும் நாமும் பாடி இறைவனை வழிபட்டு நற்பேற்றினை அடைவோமாக.

## பெருவாரி தாராய் சர்வதாரி

மாணவரும், மண்ணவரும், வைத்தியரும், புலவரும்
காணவரும் கண்கண்ட தாய்தந்தை சற்குருவும்,
பேணவரும் மந்தையோடு விவசாயி மனங்குளிர
நாணயமாய்ப் பெருவாரி தாராய் சர்வதாரி.

*-திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள்-*

**முறையாக கல்விகற்று வாழாத மனிதனை மனிதனாக எண்ணுவதே தவறு.**

உ

(தொடர்ச்சி...

## பிள்ளைக்கவி வ. சிவராசசிங்கம் அவர்கள் பாடியுள்ள கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ் (உரையுடன்)

### திரு கனகசபாபதி நாகேஸ்வரன் M.A அவர்கள்

தமிழில் வல்ல கவிதா சமுத்திரமாய் விளங்கி உருத்திரசர்மா எனும் பெயர்தாங்கி, சமானம் கூறமுடியாத களவியல் என்னும் தெய்விக நூலின் உரை வளத்தை ஆய்வுசெய்து சங்கத்தின் தலைமைப்புலவனாகத் திகழ்ந்து சோலைசூழும் கொக்குவிற் பதியிற் குடி கொண்ட பெருமானே தாலேலோ. தலை சிறந்த அடியார்க்கு அருள்செய்யும் கிருபாகர மூர்த்தியே தாலேலோ'' என்று கவிதையும் பொழிப்புரையும் தந்துள்ளார் பிள்ளைக்கவி வ. சிவராசசிங்கம் அவர்கள். அடுத்த பாடலிலே (தாலப்பருவம் செய் 5) முருகபரத்துவம் பேசப்படுகிறது.

பிள்ளைக்கவியின் பாடல்களெல்லாம் அருளமுதச்சுவை பயப்பனவேயாம். சுருக்கமாக நோக்கின் ப்க்திப்பாவாணர்கள் சமுதாயநலன் பொதிந்த பாடல்களைப் பாடவில்லை. அப்படிப்பாடினாலும் வெகு குறைவான பாடல்களே பாடியுள்ளார்கள் என்று கூறும் கண்டன விமர்சனமும் நமது சிந்தனையிலே குறுக்கிட வந்துபுகுந்து தர்க்கம்பண்ணி நிற்கிறது. இப்பிள்ளைத் தமிழிலேயுள்ள வருகைப் பருவத்துப்பாடல்கள் அக் குற்றச்சாட்டுக்களை மறுத்து- மறுதலித்து நிற்பனவாயும், அவலமுறும் மக்களுக்கு அஞ்சேலென்று அபயமளிக்குந் தெய்வமாயும் சுட்டப்படும் நிலை பிரச்சாரப்படுத்தப்பட வேண்டிய தொன்றாகிறது. மனித மாண்பும், மனிதத் துன்பமும் நீங்குவதற்கு அருள்புரியவருக! வருக என்று பாடும் வருகைப்பருவத்துப் பாடல்கள் உலகமக்களுக்கு என்றும் எப் பொழுதும் பாராயணஞ்செய்து முருகப் பெருமானைத் தொழ உதவவல்லன. ஆகவே கொக்குவில் கிருபாகரர் பிள்ளைத்தமிழ் நூலின் வருகைப்பருவத்துப் பாடல்கள் நித்திய பாராயணமாக அமைய வல்லன. பிள்ளைக்கவி முருகனை எதற்காக வரவழைக்கின்றார் என்று வருகைப் பாடல் இரண்டில் பின்வருமாறு பாடுகிறார்.

''அரக்கர் குலத்தினுங் கொடிய
ஆரியப் பேய்க் கணத்தர் தமி
ழுயலார் தம்மை விலங்கினுங்கீ
ழுடிமையாகக் கருதி மிக
இரக்கமின்றிக் கண்ணிடந்தும்
எரிவாயுயிரோடிட்டு மெடுத்
தியம்பற்கரிய சித்ரவதை
யியற்றுங் கொடுமையிருந் தெம்மைப்
புரந்து ரட்சித் திடவருக
புவனந்தன்னில் தருமநெறி
போற்ற வருக அனுதினமும்

பூசலின்றிக் கலியுகத்து
வரத வாழ வழிவகுக்க
வருக கொக்குவிற் பதிசேர்
மன்னாவருக! வருகவே!!

(வருகைப்பரு செய் 02)

"கிருபாநிதியாகிய அருள் வள்ளலே, கலியுகவரதனே அசுரர்கூட்டத்தாரினும் கொடுமை மிக்க ஆரிய கூட்டத்தினர் அயலவராகிய தமிழரை விலங்கினும் இழிந்தவர்களாக எண்ணிச் சற்றும் இரக்கமில்லாமல் கண்களைத் தோண்டியும் நெருப்பில் இட்டு வதைத்தும் கூறுதற்கரிய துன்பங்களைச் செய்யும் கொடுமையிலிருந்து எம்மைக் காத்துப் புரக்கவருக. உலகத்தில் தருமநெறியைப் பேணிக் காக்க வருக. எல்லா இனத்தவர்களும் பகையில்லாமல் வாழ்வதற்கு வழிகாட்டும் வண்ணம் வருக!" என்பது உரை. இவை மனிதராலாகுமோ? முருகா வருகவே! எனப்பாடுகின்றார்.

"வேத சிவாகம வோசை ஒலி முழங்கும்
விவேக சைவ சித்தாந்த உரைமுழங்கும்
போதமிகு புராண படனம் முழங்கும்
புறவகநூல் தமிழியல் சுடர்ப்பொருள் முழங்கும்
தாதகி மாதவி முல்லை மௌவல் காயா
தாங்குமலர்ப் பொழில் மதுவார் அறிமுழங்கும்
சோதிமிகு கொக்குவில் வாழரசே பேரித்
துழனி யட்டதிசை பரவ முழக்குவாயே"

(சிறுபறை; செய் 05)

என்பது பாடல்.

"வேத சிவாகமங்கள் ஓதும் ஒலி முழங்குவதும் நுட்பமிக்க சைவசித்தாந்த உரைநிகழ்த்தும் ஒலிமுழங்குவதும் ஞான மிகுந்த புராணபடன ஒலி முழங்குவதும் அகப்புற நெறிகள் கொண்ட தமிழியற் பொருளாய்வு ஒலிமுழங்குவதும் ஆத்தி, குருக்கத்தி, முல்லை, மல்லிகை அஞ்சனியாகிய மலர்கள் விளங்கும் சோலையில் தேன்தேடும் வண்டுகளின் ஒலி முழங்குவதும் ஆகிய பல்வகை ஒலிகள் மிக்க கொக்குவிற் பகுதியில் வாழும் இறைவனே பேரிகையின் ஒலி எட்டுத் திக்குக்களிலும் ஒலிக்கும்படியாக அதனைச் சிறிது முழக்கியருள்வாய்"

என்பது செய்யுளின் பொருள். பிள்ளைத்தமிழின் சிற்றிற்பருவத்து மூன்றாவது பாடலில் சிறுகுடிலைச் சிதைக்க விடவேண்டாமென்று வேண்டிப்பாடுவதாயமைவது. 'சிற்றில் சிதையேல்' மூன்றுபொருளில் வருவதறிந்தின்புறுக! இதிலே பல்வேறு முருகத்தலங்கள் வருகின்றன.

"தென் பாரத நாட்டாறுபடைத்
திருவீடுகள்போ லீழமதில்
தென் மாணிக்க கங்கைவளம்
சேர்க்கும் கதிர்காமம் நல்லூர்

அன்னதானக் கந்தனமர்ந்
தருளும் செல்வச் சந்நிதியே
அசுவமுகம் போய் மனிதமுகம்
அடையப் பாண்டிவள நாட்டுக்
கன்னிக் கருள் மாவிட்டபுரம்
கடல் கால் வருடுங் கந்தவனம்
கதிரோனுதய கிரிமருவு
கவினார் வெருகல் இவற்றுடனே
தென்னில் கொக்குவிற் பதிசேர்
சேயே சிற்றில் சிதையேலே
தெள்ளு தமிழ்ச்சங்கத் தலைவா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே"

இங்கு அருளியல் நோக்கிலே முருகன் சிற்றில் சிதைப்பது உலகியல் நோக்கில் அரசு சிற்றில் சிதைப்பது.

பாரத நாட்டின் தென் தமிழ்ப் பகுதியில் ஆறுபடை வீடுகள் இருத்தல் போன்று ஈழத்திருநாட்டில் மாணிக்க கங்கை வளம்படுத்தும் கதிர்காமம், நல்லூர், அன்னதானக் கந்தனெனப் பெயர் பெற்ற செல்வச்சந்நிதி, பாண்டிய நாட்டு இளவரசிக்கு அவளின் குதிரைமுகம் போய் மானுடமுகம் அமைய அனுக்கிரகித்த மாவிட்டபுரம். இறைவனது பாதங்களையும் அடியார் கால்களையும் கழுவிச் செல்லும். கடல்சூழ்ந்த கந்தவனம், தினகரன் எழுதற்கிடமாக அமைந்த உதயகிரி என உரைக்கத்தகு வெருகல் என்ற திருத்தலங்களுடன் சமானமாக எண்ணத்தகு கொக்குவிற்பதியில் எழுந்தருளிய முருக வேளே நமது சிறுகுடிலைச் சிதைக்க வேண்டாம்"

என்று பாடுவது வெறுமனே பிள்ளைத்தமிழ்க் கற்பனைப்பாடல் மட்டுமல்ல, இன்றும் யாழ்ப்பாணத்திலும், கிழக்கிலங்கையிலும் வான்படை சிறுகுடிலைச் சிதைக்கும் சூழ்நிலையில் பிள்ளைத் தமிழிலக்கியம் வெறுமனே பாரம்பரிய- இந்துமதம் சார்ந்த- வெறுமனே கற்பனை சார்ந்ததா? என்றும் எண்ணாமலிருக்க முடியவில்லையல்லவா? விளையாட்டுக்காக மட்டுமன்றி வினையாகவும் இன்று சிறு குடிலைச் சிதைக்கும் பண்பு நிலைத்துள்ளதல்லவா?

முருகா சரணம்! அடைக்கலம்!
வாழ்க முருகன் திருவடிகள்
வாழ்க பிள்ளைக்கவியும் பிள்ளைத்தமிழும்

(முற்றும்)

## வடக்குத் திசையில் தலை வைத்து ஏன் படுக்கக்கூடாது...?

காந்தமுள் வடக்கு நோக்கியே இருக்கும். வடக்குத் திசையில் மின்னணு காந்தக் கதிர்கள் இருப்பதால், தலையை அந்தத் திசையில் வைத்துப் படுத்தால், அந்தக் கதிர்கள் மூளையைப் பாதிக்கும். எனவேதான் வடக்குத் திசையில் தலை வைத்துப்படுக்கக்கூடாது.

வித்திட்டவன் விளைவை அறுப்பான் புண்ணியஞ் செய்தவன் அருளைப் பெறுவான்.

உ

# வந்திப்பவர் பந்தம் அறுத்துப் பந்துவாக்கும் பரமன்

திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள்

"தந்தையும் தாயும் தாரமுமாகிய தளையை அறுத்துப் பூங்கொத்துக்கள் பெருகி மலர்கின்ற பொழில்களையுடைய திருக்கொண்டீச்சுரத்து இறைவனுடைய சேவடியைச் சேரும்பொருட்டுச் சிந்தை செய்வீர்களாக-

என்னும் அமுதவாக்கு ஐந்தாம் திருமுறையில் அமைந்த அப்பரடிகளாருடைய ஞான உபதேச நல்வாக்குக்களில் ஒன்று. அது வருமாறு.

தந்தை தாயொடு தார மெனுந்தளைப்
பந்தம் ஆங்கறுத் துப்பயில் வெய்திய
கொந்த விழ்பொழிற் கொண்டீச் சுரவனைச்
சிந்தை செய்ம்மின் அவனடி சேரவே. (5-703)

பதி, பசு, பாசம் என்பன முப்பொருள். ஆணவம், கன்மம், மாயை என்பன மும்மலங்கள். பாசம் அற்றவிடத்து ஈசனிடத்தில் நேசம் மிகும். சிவனுக்கும் சீவனுக்கும் இடையே பிரிப்பை ஏற்படுத்துவது பாசமாகும். பாசம் எம்மை பந்திப்பது பட்டது.

பந்தமாக்குபவனும் பரம்பொருள், வீடு தருபவனும் பரம்பொருள். பந்தம் பற்ற வீடு விடுபடும். வீடு அணுகப் பந்தம் பறையும். உயிர்களது கட்டிற்கும் வீட்டிற்கும் காரணமானவன் கண்ணுதற் கடவுள் என்னும் உண்மையினைப்

"பந்தமு மாய்வீடும் ஆயினார்....
"பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே.....
"இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

போன்ற திருவாசக மணிவாக்குக்கள் நிருபணமாக்குவன.

சிவபிரான் தாமாக விரும்பிச் சீவர்களுக்குப் பந்தத்தையோ வீட்டினையோ பரிசளிக்கமாட்டார். அந்த அந்த ஆன்மாக்கள் ஈட்டிக்கொண்ட நல்வினை தீவினைகளுக்கு ஏற்ற இன்ப துன்பங்களைக் கூட்டி வைப்பார்.

ஆயினும் சிவபெருமானுடைய நாமமாகிய நமச்சிவாயத்தைச் சிந்தையால் மகிழ்ந்து செப்ப வல்லார்கள் யாவராயினும் பந்தமாகிய பாசத்தை அறுக்க வல்லர் என்பது திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய ஆணித்தரமான திருவாக்கு.

"நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சிந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.

திருநாவுக்கரசு நாயனார் ஐந்தாம் திருமுறையில் மேலும் மனிதர்களுடைய மயக்கத்தை மாற்றுகின்றார். சிவபெருமானைச் சிந்தனை செய்யும் உங்களைப் பந்துவாக்கி உய்யக் கொள்வார். பந்தம் நீக்கிப் பந்துவாக்கிக் கொள்வார். பந்தம் - உலகப்பற்று. பந்து- தம்மிடத்தில் அன்பு பெருக்குதல்.

நிலமிருந்தால் மட்டும் பயிராகாது பணமிருந்தால் மட்டும் புண்ணியம் வாராது.

மயக்கம் தீர்த்தற்குரிய மனிதர்களே! அடியேன் உரைப்பதை உற்றுக்கேளுங்கள். வெந்த திருநீற்றை அணிந்தவனாகிய விஜயமங்கைப் பெருமான் தன்னைச் சிந்தையால் நினைவார்களைச் சிக்கெனத் தமக்கு உறவுடையவராக்கி உய்யக்கொள்வார்.

வந்து கேண்மின் மயல்தீர் மனிதர்காள்
வெந்த நீற்றன் விஜயமங் கைப்பிரான்
சிந்தை யால்நினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி உய்யக்கொளுங் காண்மினே (5-718)

திருநாவுக்கரசு நாயனார் ஆறாம் திருமுறையில் அழகாகப் பந்தம் என்பது உறவு முறையிலுள்ளவரிடத்தில் வைக்கும் ஆசை என்பார். சிந்தை செய்து அந்த ஆசையை அகற்றி ஈசனிடத்தில் நேசம் வைக்கச், சிவலோக வாழ்வு சித்திக்கும் என்பதனை;

தந்தையார் தாயா ருடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமோ றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே.

'பந்தம் வீடவை யாய பராபரன்' மீது சயந்தகுமாரன் ஆற்றாமையால் ஆற்றும் புலம்பலைக் கந்தபுராணம் மகேந்திரகாண்டத்தில் காணலாம். அப்புலம்பலில் பந்தமும் வீடும் தருவான் பரம்பொருள் என்னும் சிந்தனை ஒத்திருக்கும் பான்மை உண்மையின் ஒற்றுமையை உணர்த்துகின்றது.

"வழிபாடு செய்பவர்களது பாவங்களைத் தீர்ப்பவரே! எல்லாத் தேவர்களுடைய மனத்திற்கும் அதீதமாய் நிற்கின்ற சிவபெருமானே! கற்பனை கடந்த சோதியே! இந்தப் பிறப்பில் துன்பத்தை அனுபவிக்கும்படி விதித்தீரே! முடிபு செய்த தேவரீருடைய கற்பனையை கடந்தார் தாம் யாரே?

வந்திப் பவர்பவங்கண் மாற்றுவோ யெத்தேவர்
சிந்தைக்கு மெட்டாச் சிவனே செழுஞ்சுடரே
இந்தப் பிறவி யிடருழப்பச் செய்தனையோ
வந்தித்த நின்புணர்ப்பை யாரே கடந்தாரே.

சயந்தன் புலம்புறு படலம் 58

ஒரு வழிக்குப் பார்த்தால் பந்திப்புப் பந்திப்புத்தான். ஒன்று உலகத்தோடு என்றால் மற்றையது சிவனோடு சார்ந்தது. ஆனால் இரண்டிற்கும் இடைவெளி, மடுவுக்கும் மலைக்கும் அப்பாற்பட்டது.

உலக பந்த பாசம் என்றும் இன்னல் பயப்பது.
சிவ பந்த பாசம் என்றும் இன்பம் பயப்பது.

அதனால் ஒப்பிடுகைக்கு இரண்டும் ஒத்துவரா என்பது வெளிப்படை.

உ

# பிறவி எனும் சுழல்

திரு இ. சாந்தகுமார் அவர்கள்

"நமது உயிர் தங்கி இருக்க இறைவன் நமக்களித்த வாடகை வீடுதான் இந்த உடல். இதனை எப்பொழுதாவது ஒருநாள் காலிசெய்துதான் ஆகவேண்டும்.

பிறவி என்னுமிடத்துப், பல்வேறு பிறவிகளாய் அதாவது புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்.... வல்லசுரராகி முனிவராய்த் தேவராய் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன் எம்பெருமான் என்று சிவபுராணம் விளக்கம் தருகிறது. இப்படிப்பட்ட எல்லை யற்ற பிறவிகளில் இம்மானுடப்பிறவி உயரியது.

''அரிது அரிது மானுடராதல் அரிது'' இவ் எல்லையற்ற பிறவிகளின் நற்பயனாக எமக்கு இந்த மானுடப்பிறவி கிடைத்திருக்கின்றது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? இதை நாம் உரிய முறையில் பயன்படுத்தவில்லை என்றால் மீண்டும் பிறவிச்சுழல்.

மானுடப்பிறவி எடுத்த நாம் இவ் உலக மாயையிற் சிக்கி உழன்று கொண் டிருக்கிறோம். அதன் பயனாக மறுபடியும் பிறவிச்சுழலுக்கு வழிகோலுகின்றோம். நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? ஏன் வந்தோம்? இதை நாம் ஆழமாகச் சிந் திக்கவேண்டியவர்களாகின்றோம்.

நான் என்பது ஆத்மா, உடலல்ல இதை நாம் உணரவேண்டும். இவ்வாத்மா இதற்குமுன் எத்தனை எத்தனை பிறவி களோ? இனியும் எத்தனை எத்தனை பிறவிகளோ! ஆத்மா என்பது பரமாத்மா வின் சிறுபொறியே. அங்கிருந்து வெளிப் பட்ட இச்சிறுபொறி மீண்டும் அங்கே சென் றடைய வேண்டும். ஆனால் அது மாயை யிலே சிக்குண்டு தவிக்கிறது. அதை உணரவும் ஆத்மா விடுதலை பெறவும் இம்மானுடப்பிறவி எமக்கு ஒரு அரிய வாய்ப்பாகக் கிடைத்திருக்கின்றது.

இவ்வுலகிலே காணப்படுகின்ற சகல ஜீவராசிகளும் இறைவனின் படைப் புக்களே இந்த ஒருமைத்துவத்தை உணர வேண்டும். ஆகவே எல்லா உயிர்களையும் நேசித்தல் வேண்டும். எல்லா உயிர்களிடத் தும் கடவுளைக்காணவேண்டும். அன்பி னால் அனைத்து உயிர்களையும் நேசிக்க வேண்டும். ஆசைகளற்ற, சுயநலமற்ற "அன்பே சிவம்" "மக்கள் சேவையே மகே சன் சேவை" இப்படிப்பட்ட சேவைகளே ஆத்ம விடுதலைக்கு உகந்தவை.

இந்தப் பரந்த உலகிலே உள்ள அனைவருக்கும் ஒளி கொடுப்பது ஒரு சூரியன்தான். அதேபோல இறைவனும் ஒருவனேதான். மதங்கள் என்பது பல்வேறு பாதைகளே. பல இடங்களில் உற்பத்தி யாகின்ற நதிகள் எல்லாம் எப்படி ஒரே கடலில் சங்கமிக்கின்றனவோ அதேபோல அனைத்து மதங்களும் ஒரே இறைவனைச் சென்றடைகின்றன.

"உலகிலே இருப்பது ஒரே மதம் அது அன்புமதம்"

"உலகிலே இருப்பது ஒரே பாஷை அது இதய பாஷை"

உங்கள் நெஞ்சத்தினுள்ளே இறைவன் இருக்கிறார் என்பதை நீங்கள் மறந்து விடுதலாகாது. எல்லோருடைய நெஞ்சங்களிலும் கடவுள் எழுந்தருளியிருக் கிறார் எனபதையும் நாம் நினைவில் இருத்திக்கொள்ளவேண்டும்.

**மின்சாரம் குமிழுக்குள் பிரகாசிக்கும் கடவுள் ஞானியருக்குள் பிரகாசிப்பார்.**

நமது நாட்டை எடுத்துப் பார்ப்போமே யானால் எத்தனையோ சமயங்களைப் பின்பற்றுபவர்கள் வாழ்கின்றனர். இச் சமயங்கள் எல்லாம் அன்பு, இரக்கம், ஒழுக்கம், கொடை, தியாகம் எந்த உயி ரையும் தன்னுயிர்போல எண்ணவைக்கும் பண்பு, பெருந்தன்மை என்பவற்றைத் தம் மகத்தே கொண்டுள்ளன. உதாரணமாக பௌத்த சமயத்தினை எடுத்துப் பார்த் தோமேயானால் அது அன்பும், இரக்கமும் அரிய போதனைகளும் நிரம்பிய சமய மாகவே மிளிர்கின்றது. இச் சமயத்தை உண்மையாகக் கடைப்பிடித்து ஒழுகு பவன். "மாந்தருள் மாணிக்கம்" ஆகக் கருதப்படுவான். அதேபோன்று கிறிஸ்து வின் அரிய போதனைகளும் அமைந் திருக்கின்றன.

"தன்னைப்போலப் பிறரையும் நேசி" இந்த ஒரு இரத்தினச் சுருக்கமான போதனையொன்றே மனிதனைத் தெய்வ மாக்கிவிடாதா? தன்குறைபோல ஏனை யோரின் குறை பொறுத்து மன்னிப் பளிக்கும் பெருந்தன்மை இருப்பின் இன்று உலகில் உள்ளது போன்ற கொலை, களவு, சண்டை, பலவந்தம், பலாத்காரம் என்பன இருந்த இடம் தெரியாது அகன்று விடுவதுடன் நம் நாட்டில் அன்பு, தியாகம் போன்ற பெருந்தன்மைகள் மலிந்து மனி தத் தெய்வங்கள் வாழும் மோட்சமாகி விடாதா? இந்து சமயத்தினைப் பார்க்கும் போது பொல்லாததைச் செய்யத்தூண்டு கிறதா? இல்லை ஒரு நாளும் இல்லை. இந்துமதம் பக்தியை வலியுறுத்த வில்லையா? இவ்வாறு தான் ஒவ்வொரு சமயமும் அன்பையும் பக்தியையும் கருணையையும் வலியுறுத்துவதாகின்றது. எந்த மதமும் பொல்லாததைச் செய் எனச் சொல்வதில்லை. சொல்லப்போவது மில்லை. இப்படியாக மனிதனை மனித னாக வாழவைக்கக்கூடிய அருமருந்து கள் கைவசமிருக்க வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவது போல நாம் சதாவாழ்வுக்கலைவது எவ் வளவு மதியீனம்.

சமயத்தலைவர்கள், சமயப்பெரி யார்கள் பலர் தாங்கள் தங்களுக்குள் ஒன்றுகூடி வாழ்தல், நட்புப்பாராட்டுதல், ஒன்றாகச் சேர்ந்து பொதுக்கூட்டங்களில் மேடைகளில் காட்சியளித்தல் என்பன மத விரோதங்களை வேரோடு அழிக்கத்தக்க நல்ல காரணங்களாகும். இப்படியாகச் சமயகுரவர்களும், சமயப்பெரியார்களும், மக்களும் பிறமதங்களுக்கு மதிப்புக் கொடுத்து வருவார்களாயின் அவர்களி டையே சூழ்ந்திருக்கும் தீய இருள் என் னும் அரக்கன் நீங்கிச் சமயம், பக்தி என்ற ஒளி சுடர்விட்டுப் பிரகாசிக்கும் என் பது திண்ணம். இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தம் சமயங்களுக்கு மதிப்புக் கொடுத்து நடப்பார்களேயானால், எமது இலங்கை வருங்காலத்தில் அன்பு, தியாகம், பொறுமை, அகிம்சை நிறைந்த புண்ணிய பூமியாகத் திகழும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

"பணம் சேர்ப்பது மட்டும் வாழ்க்கையன்று; நல்ல மனங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

"நல்லதை விதை தீயதைப் புதை"

உலகை அறிந்தவன் வெட்கப்படமாட்டான் தன்னை அறிந்தவன் அகம் பாவம் அடையமாட்டான்"

"நான் நேரத்தைப் பாழ்படுத்தினேன் இப்போது நேரம் என்னைப் பாழ்படுத்துகிறது"

**கோபத்திற்கு விஞ்சின பாவமுமில்லை சாந்தத்திற்கு விஞ்சின ஞானமுமில்லை.**

உ

# காலத்தின் தேவை

## செஞ்சொற்செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள்

உலகம் எங்கே போகிறது? என்னும் வினா நல்ல சிந்தனையாளர்கள் அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது. காடுகளில் காட்டு விலங்குகளில் ஒன்றாகத் திரிந்த மனிதன் வேட்டையுகம், விவசாய யுகம், கைத்தொழில்யுகம் என நாகரிக வளர்ச்சிகண்டு விஞ்ஞான விண்வெளி யுகத்திற்கு முன்னேற்றமடைந்துள்ளான். அறிவியல் வளர்ச்சி வியப்பைத் தருகிறது. ஆனால், வாழ்வியலில் எங்கே போகிறான்!

''மனிதன்'' உயர் விழுமியங்களைத் தன்னகத்துக் கொண்ட உயிர் ஆகும். ஏனைய உயிர்களைத் தாவரம், விலங்கு எனக் குறிப்பிடுகிறோம். மனிதனை, விலங்கு எனக் குறிப்பிடாமல் விலங்கிலிருந்து வேறுபட்ட உயிராக உயர்ந்ததாக எண்ணுகிறோம். எண்ணம் சரியாக இருந்த காலம் ஒன்றுண்டு. ஆனால் மனிதன் இன்று எங்கே போகிறான்! விலங்கினும் கீழான உயிராகத் தன்னை இனம் காட்டிக் கொள்கிறான்.

கலியுகம் எப்படியிருக்குமெனப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. அவற்றைப் படிக்கும்பொழுது இப்படியும் வருமா? எல்லாம் கற்பனையாகத்தான் இருக்கும் எனத் தோன்றும். ஆனால் இன்று நடப்பவை கற்பனையைத் தாண்டிய நியமங்களாக விரிவதைக் கண்முன் காண்கிறோம். ஒழுக்கம் கேள்விக்குறியாகிவிட்டது. உயிருக்கு மதிப்பில்லை. பிணக்குவியல்களின்மேல் நடக்கிறோம். சுழலுடன் ஒத்துப்போவதா? ஒத்துப்போகமுடியாமல் துயருறும் ஜீவன்கள் தாம் எத்தனை, இறைவா! விடிவு வராதா என்ற ஏக்கம். இவற்றுக்கு மத்தியில் "தர்மம்" இன்னும் அழியவில்லை என நினைக்க வைக்கும் சில செயல்கள் ஆறுதல் அழிக்கின்றன.

யாழ்ப்பாண மக்களில் அனேகம் பேர் ஏதாவதொரு வகையில் மன அழுத்தத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள். வாழ்க்கைச் செலவு இமயத்தைத் தொடுவதனால் ஏற்படும் விரக்தி, தமது பிள்ளைகளுக்கு வயது வந்தும் திருமணம் செய்து கொடுக்க முடியாதபடி ஓங்கி உயர்ந்து நிற்கும் சீதனக் கொடூரம். தமது பிள்ளைகள் வன்முறைக் கலாசாரத்திலிருந்து மீட்க முடியவில்லையே என்ற தவிப்பு. காற்று மண்டலமும், நிலமும் நீரும் நச்சுப்புகையினால் நாசமாகி ஏற்பட்டுவரும் திடீர் நோய்கள்..... இப்படியாக எண்ணற்ற துயரம் இன்று பலரை மன நோயாளர்களாக மாற்றிவிட்டது.

இன்றைய காலத்தின் தேவை என்ன? இதுதான் அவசியமாகவும் அவசரமாகவும் சிந்திக்கவேண்டிய விடயம் ஆகும். நம்மில் பலரது சிந்தனைகள் கவலை தருவனவாகவே அமைகின்றன. "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று சொன்னார்கள். இன்று எத்தனை கோயில்கள்? இவை நோக்கத்தை நிறைவு செய்கின்றனவா? ஆடம்பரத்தின் மாளிகைகளாக அல்லவா காட்சி தருகின்றன. பக்திக்குரிய இடமாக இருக்க வேண்டிய இடங்களில் பக்தி காணாமல் போய்விட்டது. அங்கும் வன்முறை நுழைந்துவிட்டது. ஆடம்பரமான கும்பாபிஷேகம், திருவிழாக்கள் அடுத்தநாள் வழிபாட்டிற்கு ஆள் இல்லை பல இடங்

களில் இறைவனும் தனிமையில் இனிமை காணவேண்டியவனாக்கப்பட்டுள்ளான். இத் தகைய கைங்கரியங்களில் ஈடுபடும் தன வந்தர்களே! இன்றைய காலத்தின் தேவை என்ன?

கன்மம் என்றால் வினை அல்லது செயல் என்பது பொருள். நாம் செய்யும் செயல்கள் யாவும் கன்மங்களே. நமது ஒவ்வொரு செயலுக்கும் ஒரு நோக்க முண்டு; பலனுண்டு, அப்பலனை அனு பவித்தலும் ஒரு செயலாகும். செய்யும் செயல் மட்டுமல்ல நமது எண்ணம், சொல் ஆகியவையும் கன்மத்தினுள் அடங்கும். நமது செயல்கள் சிலவற்றுக்குப் பலன் உடன் கிடைக்கும். சிலவற்றுக்கான பலன் காலம் தாழ்த்திக் கிடைக்கும். இக்கருத் துக்களைத் தத்துவஞானங்கள் அனைத் தும் பொதுவாக ஏற்கும்.

சைவசித்தாந்தம் வினையை சஞ் சிதம், பிராரத்தம், ஆகாமியம் எனப் பிரிக் கின்றது. சென்ற பிறப்புக்களிலிருந்து கொண்டு வந்தது சஞ்சிதம். இவற்றில் இப்பிறப்பில் அனுபவிப்பது பிராரத்தம். இப்பிறப்பில் தேடிக்கொள்வது ஆகாமியம் எனச் சுருக்கமாகக் கூறலாம். அனைவரும் ஊழ் என்னும் பழவினைக்கு உட்பட்டவர் களே புராண இதிகாசக் கதைகள் இவ் உண்மைக்கான இலக்கியங்கள். மகாபார தத்தில் தருமனும் வனவாசம் அனுபவித் தான் என்றால் பழவினை எத்தனை வலிமையுடையது! பழவினையே பெரு வாரியாக இருக்கையில் ஆகாமியத்தின் அளவையும் அதிகரிக்கும் செயல்களில் ஈடுபடலாமா?

இப்பிறப்பில் நடப்பவை யாவும் பழவினையின் பலன்கள் என்றால் நாமாக முயன்று செய்வதற்கு எதுவும் இல் லையா? எல்லாம் விதிப்படிதான் என்று கூறிக்கொண்டு ஒதுங்கும் சோம்பேறிகள் நாத்திகர்கள் தாம். ஒவ்வொரு முயற்சிக் கும் ஏற்றபலன் நிச்சயம் கிடைக்கும் என் பதே விதி என்ற வார்த்தையின் பொரு ளாகும். பழவினையின் பலன் ஒருவன் கடன்பட்டிருக்கிறான். முயற்சி இல்லா விட்டால் இக்கடனை அடைப்பது எப்படி? உழைப்பதன்மூலம் கடனையும் அடைத்து இப்பிறப்பிற்குப் பொருளையும் தேடலாம் அல்லவா! தத்துவ உண்மைகள் இப்படி யாக விரிந்துகொண்டு போகின்றன. ஆனால் நாம் எங்கே போகிறோம்? இன் றைய மனிதன் பழவினையைக் குறைத் துக்கொள்வதற்கு முயற்சி செய்வதை விடுத்து அடுத்த பிறப்புக்குப் பழ வினையை மூடை கட்டும் செயல்களிலல் லவா ஈடுபட்டிருக்கிறான். இன்று மனித சமூகத்தின் சிந்தனை ஆறறிவுக்குரியதாக இல்லை. கொலையைச் செய்துவிட்டுப் பாவம் நீக்கத் தலயாத்திரை புறப்படுகிறார் கள். கொலைச் செயல் புரிந்ததற்கான தண்டனையை நீ அனுபவித்தே ஆக வேண்டும். அதுதான் நியதி! முற்பிறப்பிற் செய்த கொலைக்குத் தண்டனையாகவே மறுபிறப்பில் குற்றமற்ற கோவலன் கொலையுண்டான் என்று சிலப்பதிகாரம் எச்சரிக்கிறது. தலயாத்திரைக்குரிய பலன் தனியானது. கொலைச் செயலுக்கு பிராயச்சித்தம் கிடையாது! கணவன் கொலை செய்ய மனைவி பிராயச்சித்தம் தேடமுடியாது. அவரவர் வினையை அவரவரே அனுபவித்தாக வேண்டும். இத் தகைய விதிகளுக்கு இறையருள் ஒன்றின் மூலமாகவே விலக்குப்பெறமுடியும். இறை யருளைப் பெறுவது எப்படி?

பற்றற்ற பிரார்த்தனை ஒன்றுதான் இறை திருவருள் பெறுவதற்கான மார்க்கம் ஆகும். பிரார்த்தனை ஏதாவது நோக்

நீர்நிலைக்கு அலையுண்டு பணப்பெருக்குக்கு அலைச்சலுண்டு.

கத்தை உடையதாக இருக்கக்கூடாது. "அனைவரும் வாழ வேண்டும்" என்பது தான் பிரார்த்தனையாக இருக்கவேண்டும். உண்மையான பிரார்த்தனை இருவினை யொப்பு, மலபரிபாகம் என்பதனூடாக இறைவன் தாள்நோக்கி ஆன்மாவைக் கொண்டு செல்லும்.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

-குறள் 5-

இறைவனின் உண்மையான இயல்புகளை நாம் உளமாரப்பாடி வணங் கினால் அறியாமையால் தோன்றும் நல் வினை, தீவினை என்ற இருவகை வினை களும் நம்மை வந்து அடையவே மாட்டா!

தீவினை அகலவேண்டும் என்பது சரி! ஆனால் நல்வினையை விரும்பக் கூடாது என்பது எப்படி? திருவள்ளுவர் வார்த்தை ஜாலம் செய்வதில் வல்லவர். "இருள்சேர் இருவினையும்" இதில் நல் வினையும் பலன் கருதியதாக இருந்தால் இருள்சேர் வினையாகும் என விநயமாகக் கூறியுள்ளார். இன்று பலர் நல்வினை ஆற்றுகிறார்கள். ஆனால் அதன் பின்னணி யில் ஏதாவது நோக்கம் காணப்படுகிறது. இந்த எண்ணமும் பிறவியை ஏற்படுத்தும்.

ஆகவே, காலத்தின் தேவை நல் வினை. அதுவும் இருள்சேரா வினையாக அமையவேண்டும்.

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்,
மக்கள் யாக்கையிற் பிறத்தலும் அரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்
மூங்கையும் செவிடும் கூனும் குருடும்
பேடும் நீங்கிப் பிறத்தலும் அரிதே...."

-ஔவையார்-

குருதிக்கறை தோய்ந்து வடிக்கப் பெற்ற வேலினை உடையவனே! மக்கள் யாக்கையில் வந்து பிறவி எடுத்தல் அரிய தாகும். அப்படிப்பிறவி எடுத்தபோதும், ஊமையும், செவிடும், கூனும், குருடும், அலியுமாகிய குறைகள் நீங்கிப்பிறத்தல் அரிதாகும். தமிழ் மூதாட்டி அருளிய வாக்கு இவைகள். இத்தகைய குறைபாடு களுடன் மானுடப்பிறவி எடுத்துள்ள பல ரைக் காணமுடிகிறது. முன்னைவினை-கன்மத்தின் விளைவாக இப்பிறவி அமைந்துவிட்டது எனும் சித்தாந்தம் அவர்களுக்கு ஆறுதல் அளிக்குமா?

பிறவியிலேயே வாய்பேச முடியாத, கேள்தகைமை இல்லாமல், மனவளர்ச்சி குன்றியவர்கள் இன்று நம்நாட்டில் கணிச மான அளவு காணப்படுகின்றனர். இவர் களைப் பராமரிப்பது காலத்தின் முதன் மைத் தேவையாகும். "சிவபூமி அறக்கட் டளை" இப்பணியைச் சீராக ஆற்றிவரு கிறது. கோண்டாவிலில் இயங்கும் சிறுவர் மனவிருத்திப் பாடசாலை ஊடாகப் பய ணம் செய்யும் வேளைகளிலும், பிள்ளை களைக் காணும் போதும் "ஒரு புனித பணி" நிகழ்வது கண்டு அகம் மகிழ்கிறேன்.

சென்னையை அடுத்துள்ள "இராமவரம் தோட்டம்" என்னும் இடத்தில்

பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே.

(மறைந்த தமிழக முதலமைச்சர் M.G.R. அறக்கட்டளை) பார்வையற்ற, காது கேளாத, மனவளர்ச்சி குன்றியவர்களுக் கான அறக்கட்டளையைப் பார்வையிட் டுள்ளேன். ஆடம்பரத்திற்குப் போட்டியிட்டுச் செலவு செய்பவர்கள் இத்தகைய அறப் பணிகளுக்கு முன்வருகிறார்களில்லையே? என்று கவலைப்பட்டிருக்கின்றேன். சிவபூமி அறக்கட்டளை இச் சீரிய பணியை ஆற்றி வருவது கண்டு மனம் மகிழ்கிறேன். இவ் அறக்கட்டளையைச் சார்ந்த அனைவரின தும் பாதம் பணிகிறேன்.

சிவபூமி நிறுவனம், புற்றுநோயா ளர் கருணை நிதியையும், கண்தானசபை யையும் நிர்வகித்து வருவதுடன் வடக்கம் பறை அம்மன் ஆலயத்திற்கருகில் முதி யோர் காப்பகத்தையும் ஆரம்பித்துச் செயற்படுத்தி வருகிறது. அண்மையில் இவ் முதியோர் காப்பகத்தின் பொங்கல் விழாவிற்குச் சென்றிருந்தேன். தம்பி ஆறு திருமுருகனும் மற்றவர்களும் அன்புடன் வரவேற்றார்கள். அங்குள்ளவர்களை அறி முகம் செய்து வைத்தார்கள். அவர்களுக் கான உணவு, தங்குமிட வசதி, குளிய லறைகள், கழிப்பிடங்கள் அனைத்தும் செவ்வனே வடிவமைக்கப்பட்டிருந்தன. அங்குள்ள முதியவர்களைத் தாய், தந்தையராகக் கருதிப் பராமரிக்கும் அரும் பணி இறைபணியாகும். காலத்தின் தேவையாக அமைந்துவிட்ட இப்பணி சிறப்பாகத் தொடர நல்லிதயம் உடைய வர்கள் அனைவரும் உதவவேண்டும். மக்கள் தொண்டே மகேசன் தொண் டாகும்.

சூரியன், சந்திரன் உள்ள காலம் வரை இப்பணியைப், பேணிப்பாதுகாத்து நல்லமுறையில் வழிப்படுத்தி மனவளம் குன்றிய குழந்தைகளையும் கவனிப்பாரற்ற சொத்துக்களாகவுள்ள பெரியவர்களை யும் வாழவைக்கும் பொறுப்பு கருணை உள்ளம்கொண்ட மானுடர்களைச் சார்ந்த தாகும்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராய்க் கொளல்

-குறள் 443-

உயர்ந்தாரைப்போற்றி- பெரியவர்களை- அவர்களை நம் உறுப்பினர்களாக ஆக்கிக்கொள்வதைப் போன்ற பெரும்பேறு உலகில் எதுவும் இல்லை.

(தொடரும்...

## புலன்களும் நானும் தேன் கூடும்

விளைந்த கவித்தேன் விதியாய்க்
கந்தன் அருட் சொற்றொடர்
நிறைந்த அவனருளை நாடிய புலன்கள்
என்னில் பதித்த கருத்தை
குழைந்து தமிழில் குறைவிலாப் பக்தியுடன்
கூட்டினிலுறையும் ஆன்மா நான்
இழைத்தேன் அருட்டா என்புலன்கள்
சுவைத்த சந்நிதியான் அருளின்
இனிப்பின் இனிப்பை இளையோரும்
அறிந்து இன்புற்று உய்யும் பொருட்டே.

*-இராம ஜெயபாலன்-*

**உண்மைக்குப் பயப்படுகிறவன் ஒருவருக்கும் பயப்படமாட்டான்.**

உ

# தமிழ்க் கடவுள் யார்?

**திருமதி ஜனகா சிவசுப்பிரமணியம் அவர்கள்**

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க் குடி. இக்குடிகள் வாழ்ந்த காலங்கள் சங்ககாலம் ஆகும். இக்காலத்தினை 1-3 நூற்றாண்டு, சங்ககாலம் எனவும், 3-6 நூற்றாண்டு சங்கமருவிய காலம் எனவும் அழைப்பர். இம்மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வை நடாத்தி வந்தனர். அதனுடன் இறைநம்பிக்கை கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். இவைபற்றிய தகவல்களைப் பதிணென்மேற்கணக்கு பதிணென்கீழ்க்கணக்கு இலக்கியங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். சங்க இலக்கியங்களில் சிவன், முருகன், கொற்றவை, திருமால் போன்ற பல தெய்வங்கள் வழிபடப்பட்ட போதிலும் முருகனையே முதல் தெய்வமாகவும் தமிழ்த் தெய்வமாகவும் வழிபட்டனர் என இலக்கியங்களினூடு அறியமுடிகின்றது. சங்ககால நூல்களில் அக்கால மக்கள் முருகனையே முதல் தெய்வமாக வழிபட்டமை பற்றியும் தமிழ்ச்சங்கத்திற்கு முருகன் வளம் சேர்த்தமை பற்றியும் அறியமுடிகின்றது.

சங்க இலக்கியங்களில் முருகனை வழிபாடாற்றிய முறை பற்றி அறிய முடிகின்றது. சங்க இலக்கியங்களில் முருகனுக்குப் பலியிடல் நிகழ்ந்திருக்கிறது. காதல் வயப்பட்ட பெண்ணுக்கு முருகன் பிடித்துவிட்டான் எனத் தாய் எண்ணி முருகனுக்கு விழா எடுத்தாள். அப்போது பூசாரி தன்னை முருகன்போல் அலங்கரித்து பூசாரிமேல் முருகன் வந்ததும் பூசாரி ஆவேசத்துடன் ஆட அவனைப் பார்த்துத் தோழி கேட்கின்றாள் அறிவுள்ள வேலவனே! கோபித்துக் கொள்ள வேண்டாம் உன்னை ஒன்று கேட்கின்றேன். பல்வேறு நிறமுள்ள சோற்றையுடைய பலியை வைத்துப் படைத்துச் சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று இத் தலைவியின் தலையைச் சுற்றிப் படைக்கின்றோம். இவளை வருந்தச்செய்த மலைநாட்டுத் தலைவனுடைய மார்பும் உண்ணுமோ என வினாவுகின்றாள். இதிலிருந்து பலியிட்டு படைத்து வழிபடுவதை குறுந்தொகையின் 362ஆம் பாடல் பின் வருமாறு கூறுகின்றது.

"முருகு அயர்ந்து வந்த முதுவாய் வேல!
சினவல் ஓம்புமதி வினவுவது உடையேன்!
பல்வேறு உருவில் சில்அவிழ் மடை யொரு ......"

இக்கருத்தினை நற்றிணையின் 47ஆவது பாடலும் குறிப்பிடுகின்றது.

".... வளநகர் சிலம்பம் பாடிப் பலிகொடுத்து ......."

அகநானூற்றுப் பாடல் (22) முருகனுக்குப் பூசைசெய்யும் இடத்தை நன்றாகத் தூய்மை செய்து மலர்மாலை சூட்டி ஆரவாரம் உண்டாகும் வண்ணம் புகழ்ந்துபாடி ஆட்டைப் பலிகொடுத்தனர். அச்சம் தரும் நள்ளிரவில் எனக் குறிப்பிடுகின்றது. அதாவது

"சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து
வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ
ஊர் ஊர் கொண்ட சீர் கெழு விழவினும்......." என்கிறது.

ஒரு கணப் பொறுமை ஒரு பத்தாண்டின் இன்பமாகும்.

சங்க இலக்கியங்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படை முருகன் பற்றிய பல தகவல்களை எமக்குத் தருகின்றது. முருகனை வழிபடும் இடத்தில் கோழிக்கொடியொடு முருகனை வேண்டி அதன்பின் விழாச் செய்வர். எனவும் மிகுந்த வலிமை பொருந்திய பெரிய கால்களை உடைய ஆட்டுக்கடாவின் இரத்தத்துடன் கலந்த தினை அரிசியைச் சிலர் பலியாகச் செய்து பிரப்பங்கூடையில் வைத்து வணங்குவர் என "மதவலி நிலை இய மாத்தாள் கொழுவிடை....." என்ற பாடல் குறிப்பிடுகின்றது. அத்தோடு முருகு என்பதற்கு 15 விதமான பொருளைக் கூறி விளக்கம் தருகின்றது.

முருகன் என்ற சொல் சங்க இலக்கியங்களிலே முதன்முதல் காணப்பட்டுள்ளது என்பதற்குப் பின்வரும் பாடல்கள் சான்று பகர்கின்றன.

"கார்நறுங் கடம்பின் பரிசிலைத் தெரியல்
சூர்நவை முருகன் சுற்றத் தன்ன புறநானூறு 23ஆம் பாடலும்

"சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து" என அகநானூறு 53ஆம் பாடலும்
"முருகற்சீற்றத்து உருகெழு குரிசில்" எனப் பொருநாராற்றுப்படையும்
"முருகென மொழியும் வேலன்" என ஐங்குறுநூறு 249ஆம் பாடலும்
"முருகொத் தீயே முன்னிய முடித்தலின்" எனப் புறநானூறு 59ஆம் பாடலும் குறிப்பிடுகின்றன. இதுமட்டுமன்றிச் செய்யோன் (புறம் 59) விறல்வேள் (ஐங்குறுநூறு 250, பதிற்றுப்பத்து 2) வேல்வேள் (பரிபாடல் 18) என்ற பெயர்களும் வழக்கில் இருந்துள்ளன.

தொல்காப்பியப் பொருளதிகாரத்து அகத்திணையியலில் "சேயோன் மேயமை வரை உலகமும்" என்ற அடிகள் காணப் படுகின்றன. சேயோன் என்ற சொல்லுக்குச் சிவந்த நிறமும் விருப்பத்தைச் செய்யும் இயல்பும். நினைத்தவை முடித்தலும் தலைமைப்பாடும் உடைய கடவுள் எனப் பொருள் கூறப்படுகின்றது. இம்முருகவேள் திருமுருகாற்றுப்படை "இழையணி சிறப்பிற் பழையோன் குழவி...." என்ற பாடலில் இருந்து கொற்றவையின் மகன் எனப் புலப்படுகின்றது.

முருகு என்னும் சொல் மிகவும் தொன்மையானது. முருகன் தமிழ்க் கடவுள் என்பதுடன் மலைக்கடவுள் என வும் குறிக்கப்படுகின்றான். தமிழன், தமிழ்ப் பெருமான், தமிழ்இறை, முத்தமிழோன், குறிஞ்சிக்கிழவோன், மலைக்கிழவோன் என்னும் சொற்பதங்கள் சங்க இலக்கியங் களில் குறிப்பிடப்பட்டதிலிருந்து முருகன் தமிழ்க்கடவுள் என்பது உறுதியாகின்றது. தமிழர் தம் முன்னைப் பரம்பொருளாகிய முருகனை வழிபட்டமையைப் பரிபாடல் 5ஆம் பாடல் பின்வருமாறு கூறுகின்றது.

"யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே"

முருகனுக்குரிய மலர்களாகக் குறிஞ்சி, அலரி போன்ற மலர்களை சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது. செவ்வேள் என்ற சொற்பதமும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.

உலகில் நாம் காணும் எல்லா ஆக்கங்களும் மனித ஊக்கத்திலிருந்தே தோன்றியவை.

"சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்" எனப் பரிபாடலில் கூறப்படுவதோடு 5,8,9,14,18,19,21ஆம் பாடல்களிலும் முருகனின் திருநாமமாகிய செவ்வேள் என்ற நாமம் காணப்படுகின்றது. புறநானூற்றின் 59ஆம் பாடலிலும் ஐங்குறுநூற்றின் 250ஆம் பாடலிலும் காணப்படுவதோடு சிலப்பதிகாரத்திலும் செவ்வேள் என்ற சொல் காணப்படுகின்றது.

"அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்..." என்கிறது.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் அதிகமான பாடல்களால் வணங்கப்படும் தமிழ்த்தெய்வமாகக் காணப்படும் முருகவேள் தமிழ் மக்களுக்கு அருள் புரிந்தது மட்டுமன்றி தமிழ்ச்சங்கத்தில் இருந்து தமிழ் வளர்த்த சான்றோனாகவும் விளங்கி யிருக்கின்றார். இன்றைய தமிழ்ச் சமுதாயமும் தமிழும் செழித்துவளரத் தமிழ்த் தெய்வமாகிய முருகப்பெருமான் அருள்பாலிப்பாராக!

(தொடர்ச்சி...

**2007ஆம் ஆண்டு உற்சவம் தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்**

| | | |
|---|---|---|
| பரராஜசிங்கம் ரஜனி | திருகோணமலை | 2500. 00 |
| திருமதி வாமதேவன் சிற்றிகாமென்ஸ் | இணுவில் | 1000. 00 |
| வேணி களஞ்சியம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ச. சேனாதிராசா | கரவெட்டி | 1000. 00 |
| தம்பிராசா கண்ணன் | இமையாணன் உடுப்பிட்டி | 2000. 00 |
| பொ. குமாரசாமி சட்டத்தரணி | நவிண்டில் | 1000. 00 |
| ஆ. உமாதேவி | உடுப்பிட்டி | 1000. 00 |
| திருமதி சி. முருகேசம்பிள்ளை குடும்பம் | சிவன்வீதி பருத்தித்துறை | 6000. 00 |
| இ. கந்தசாமி பெரியமதவடி | துன்னாலை மேற்கு | 2000. 00 |
| ச. அஸ்விந் அரசவீதி | நல்லூர் | 1000. 00 |
| A. ராஜரெட்ணம் காலிவீதி | கொழும்பு | 2000. 00 |
| அ. அருமைத்துரை | கோண்டாவில் | 1000. 00 |
| க. திலகவதி | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| Dr. G. பவானி மகப்பேற்று நிபுணர் | யாழ்ப்பாணம் | 30000. 00 |
| சுசிலா நகை மாடம் பிரதான வீதி | பருத்தித்துறை | 3000. 00 |
| இரத்தினசிங்கம் மகேஸ்வரி | கரணவாய் மத்தி | 1000. 00 |
| ஜெயரெத்தினராசா ஜெயக்குமார் (லண்டன்) | திருமலை | 10000. 00 |
| சுந்தரலிங்கம் செல்வம் சிவலிங்கப்புளியடி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| S. தர்மலிங்கம் மூலம் மு. நந்தகோபன் அவுஸ்திரேலியா | சித்தங்கேணி | 10000. 00 |
| N. சிவசுப்பிரமணியம் | நெதர்லாண்ட் | 5000. 00 |
| மா.ந. பரமேஸ்வரன் இளந்தொண்டர்சபை | இணுவில் | 2000. 00 |
| ச. தேவராசன் | பிரமனோடை | 2000. 00 |
| தே. கிருஸ்ணசாமி | மீசாலை மேற்கு | 1000. 00 |

(தொடரும்....

அடக்கம், உண்மை, கற்பு இம்மூன்றும் பெண்களால் பாதுகாக்கப்படும் தேவதைகள்.

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் தொடர்- 17

## சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்

இறைவன் ஒலிவடிவாகவும், ஒளி வடிவாகவும் இருக்கிறான் என்றே வேதங்கள் கூறுகின்றன. ஒலி வடிவாக இருக்கின்ற இறைவனை மந்திரங்களாலும், ஒளி வடிவாக இருக்கின்ற இறைவனை அக்கினியிலும் வழிபடும் வழிபாட்டு நெறியினையே வேதங்கள் எடுத்து விளக்குகின்றன. மந்திரம் என்பது நினைப்பவனைக் காப்பது எனப்பொருள்படும். பூரணமாக ஞானத்தைப் பெற்ற ஞானிகளின் வாயில் இருந்து வரும் வார்த்தைகள் எல்லாம் மந்திரமே ஆகும் என்பதனை "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நினைப்பவனைக் காப்பது மந்திரம் என்றால் இறைவனோடு சேர்க்கும் நெறியாக யோகம் காணப்படுகிறது. மந்திரயோகம் என்றால் நினைப்பவனைக் காத்து இறைவனோடு சேர்க்கும் நெறி என்பது பொருளாகும்.

மந்திரங்களில் தலையாயது ஓம் என்ற பிரணவ மந்திரமாகும். மேலும் ஓம் என்பது எல்லா மந்திரங்களுக்கும் முதலில் சேர்த்து உச்சரிக்க வேண்டிய மந்திரமாகும். ஓ என்பதைப் பிரித்தால் அ+ உ என்ற ஈரெழுத்தாகும். அவ்விரண்டும் சிவன் சிவை என்ற இரண்டு பொருள்களைக் குறிக்கும். இவற்றை உயிர்க்குயிர் பரமான்மா, உயிர் சீவான்மா எனவும் அழைப்பர். ஓம் என்பது தாரக மந்திரம், தாண்டச் செய்வது என்பது இதன் பொருள் ஆகும். கப்பலுக்குத் தாரகம் என்றொரு பெயர் உண்டு. கப்பலானது எவ்வாறு கடலைக் கடக்க உதவுகின்றதோ அவ்வாறு சம்சாரமாகிய கடலைக் கடக்க இப்பிரணவ மந்திரம் உதவுகிறது. இம் மந்திரம் உச்சரிப்பவர்களது அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை அளிக்கக் கூடியதாகும். பிரணவ மந்திரத்தை ஜெபம் செய்பவர்கள் அஞ்ஞானம் நீங்கிப் பரமானந்தத் தன்மையை பெறுவர். ஓம் என்பதிலிருந்தே எல்லா வேதங்களும் மந்திரங்களும் தோன்றின. ஆதலால், இதனைச் செபித்தால் எல்லா மந்திரங்களையும் செபிப்பதால் உண்டாகும் பயனை அடையலாம். பிரம்மதேவர் ஓங்காரத்தைச் செபித்துப் பிரம்ம பட்டம் பெற்றதாகக் காசிகாண்டம் கூறுகிறது.

அஜபா என்று வடமொழியில் கூறுகின்ற சொல் தமிழில் அசபை என்று அழைக்கப்படும். மந்திரத்தின் பெருமையினைப் பற்றியும் திருவைந்தெழுத்தின் பெருமையினைப் பற்றியும் அசபை என்ற பகுதியில் வரும் முப்பது பாடல்களும் நன்றாக விளக்குகின்றன. அசபா மந்திரம் என்றால் ஜெபிக்கப் பெறாத மந்திரம் என்பது பொருள். இம் மந்திரம் உச்சரிக்கப் படாமல் பிரணவத்துடன் சேர்ந்து இயங்கும் மந்திரம் ஆகும். உடம்பின் மூலாதாரமாகிய குண்டலினியில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் அசபா மந்திரம் மேலோங்கி எழுதற்குரிய இரகசியத்தை வெளிப்பட உபதேசித்தவர் ஓங்கார வடிவினனாகிய விநாயகர் என்பதை

'குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து

எனத் தமிழ் மூதாட்டி ஔவையார் அருளிய விநாயகர் அகவல் குறிப்பிடுகிறது.

துன்பத்துடன் போராடப் போராடத்தான் மனிதனுக்கு வல்லமை வளர்கிறது.

அசபா மந்திரம் என்பது ஓரெழுத் தொருமொழி. அது எல்லா மந்திரங்களுக் கும் ஆதாரமாய் நிற்கும் முதல்வனைக் குறிக்கின்றது. இதனை வரிவடிவில் காட்ட முடியாது. உபதேசக்கிரமத்தில்தான் இதனை அறியலாம். ஆன்மீக ஞானியரை அடைந்து முறையாக அவர்களிடம் உப தேசம் பெற்றவர்களுக்கு மந்திரங்களை எப்படி உச்சரிக்கவேண்டும் என்பது தெரி யும். ஒலி வெளியில் கேட்குமாறு சொல் லும் நிலை ஒன்று. உதட்டளவில் சொல்வது இரண்டாவது நிலை, இருதயத் தில் வைத்துச் சொல்வது மூன்றாம் நிலை, அதற்கெல்லாம் மேலாக நான் சொல்லவில்லை. "சோஹம் ஹம்சம்" என் பது நான்காவது நிலை. இதனைப் பேசா எழுத்து என மெய்கண்ட சாஸ்திரங்களில் ஒன்றாகிய கொடிக்கவி கூறுகிறது.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும்
ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பஞ்செழுத்தும் மேலைப்
பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி

திருமந்திரத்தில் அசபை என்ற தலைப்பில் திருமூலர் கூறுவது எல்லாம் நமது சிந்தனை அந்த வழியில் திரும்பிச் சென்று பேசா அனுபூதியைப் பெற வேண்டும் என்பதே ஆகும்.

அ,உ,ம் என்ற மூன்றெழுத்துக் களும் ஒன்று சேர்ந்தே ஓம் என்ற எழுத்து தோற்றம் பெறுகிறது என்பது அறிஞர் களின் கருத்து ஆகும். ஓம் என்ற பிரண வத்தை ஓதி உணர்கின்ற ஞானமே பரம் பொருளை அடையும் நெறியாகும். பேசும் எழுத்தை 'வ' எனவும் பேசாத எழுத்தை 'சி' எனவும் கூறுவது தமிழாகம மரபாகும். சிவ என இணைத்து ஓதுவதே வழமை யாகும்.

புகழ்ந்து பேசப்படும் ஞானத்தை இடையறாது யான் போற்றுகின்றேன். தோன்றாத் துணையாக இருப்பவனும் உலகத் தலைவனுமான சிவனின் திரு வடியே துணையாகும் என்பதைத் தெளிந்து உள்ளேன். அப்பெருமானின் சேவடியை அடையும் சிவயோக நெறியை யான் உரைக்கின்றேன். சிவனைக் குறிக் கும் ஓரெழுத்து மந்திரமாகிய பிரணவத் தையும் ஓதுகின்றேன்.

போற்றுகின்றேன் புகழ்ந்தும் புகல் ஞானத்தைத்
தேற்றுகின்றேன் சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின்றேன் அறையோ சிவயோகத்தை
ஏற்றுகின்றேன் நம் பிரான் ஓர் எழுத்தே

மந்திரங்களில் மிக உயர்ந்த திருவைந்தெழுத்து மந்திரத்திற்கு அமைந்த சக்கரங்களில் திருவம்பலச் சக் கரம் மிகவும் சிறப்புடையது. ஆனந்தக் கூத்தாடும் அம்பலவாணர் அருட்சக்தி யாகிய சிவகாமியம்மையுடன் மந்திர வடிவாய் நின்று நிலவுவது இந்த யந்திர மாகும்.

வினைகள் அறுத்தலால் சிவன் அரன் ஆவான். மாயா காரியத்தை

**துன்பங்கள் நம் திறனுக்கு நம் வலிமைக்கு விடப்படும் சவாலாகும்.**

ஒடுக்குதலால் சிவன் கரன் ஆகிறான். அரன்+கரன் என்பதன் விகாரமே "அரஹர" என்பதாகும். அரஹர என்ற திருப் பெயரைக் கூறுபவர்களுக்குச் செய் வதற்கு அரிய செயல் என ஒன்றுமில்லை. அரஹர என்ற நாமத்தை உச்சரிப்பதால் அனைத்தும் எளிமையாய் முடிந்துவிடும். இத்தகைய சிறப்புடையதாய் இருந்தும் அப்பெயரை ஓதிப் பயன் அடைய மக்க ளுள் பலர் அறியவில்லை. அரஹர எனத் தியானம் செய்பவர் ஒளியுடலைப் பெற்ற வரும் ஆவார். அரகர என்று உரைப்பவர் களுக்கு வினை நீங்கி விடுவதால் பிறவி உண்டாகாது.

அரகர என்ன அறியதொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும் பிறப்பன்றே

இறைவனுடைய திருவருளுக்குப் பாத்திரமான அனுபூதிச் செல்வர்களான நாயன்மார்கள் நால்வரும் பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்பினைப் போற்றித் தாங்கள் பாடல்களிற் பாடியுள்ளார்கள்.

வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

என ஞானசம்பந்தரும்,

கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே

என அப்பர் பெருமானும்,

நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாயவே

எனச் சுந்தரரும்

போற்றியோம் நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை

என மணிவாசகரும் தங்கள் பாடல்களில் நமச்சிவாய மந்திரத்தின் சிறப்பினைப் போற்றியுள்ளார்கள்.

உடல் என்ற காட்டினுள் ஐம்புல யானைகள் தம் மனம்போல் திரிகின்றன. இத்தகைய யானைகளை அடக்கவல்லது ஐந்தெழுத்தாலான நமச்சிவாய என்னும் அங்குசம் ஆகும். ஐந்தெழுத்து மந்திரத்தின் துணைக்கொண்டு ஐம்புலன்களையும் அடக்க வல்லவர்களுக்கு ஐந்தெழுத்து மந்திரத்தின் முதல்வனாகிய சிவனின் திருவடியை அடையும் பேறு கிடைத்துவிடும்.

அஞ்சுள ஆனை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குசம் ஆவன
அஞ்சையும் கூடத்து அடக்க வல்லார்கட்கே
அஞ்சு ஆதி ஆதி அகம் புகலாமே

நடராச வடிவமே பஞ்சாட்சர வடிவமாகும். பஞ்சாட்சரத்தில் தூல பஞ் சாட்சரம் (நமசிவாய), சூக்கும பஞ் சாட்சரம் (சிவாயநம), காரண பஞ்சாட்சரம் (சிவாய) மகாகாரண பஞ்சாட்சரம் (சிவ), மகா மனு (சி) என ஐந்து பிரிவுகள் காணப்படுகின்றன. நமசிவாய என்னும் நகராதி பஞ்சாட்சரத்தை ஓதினால் நல் வினைப் பலன்கள் உண்டாகும். இப் பஞ்சாட்சரத்தைச் செபித்து வந்தால் வலிய தீவினைகள் எல்லாம் அடங்கி விடும். உலகியல் வாழ்க்கையில் காரியங் கள் கைகூடுவதற்கு நமசிவாய மந் திரத்தை ஓதுதல் வேண்டும். முக்தி காமிகள் உச்சரிக்கவேண்டிய மந்திரம் சிவாயநம ஆகும். சிவாய நம மந்திரத்தை உணர்ந்து ஓதினால் இறைவன் நேரடி யாகக் கருணைபுரிந்து அருள் செய்வான்.

நம் முதல் ஓர் ஐந்தின் நாடும் கருமங்கள்
அம் முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
சிம் முதல் உள்ளே தெளிய வல்லார்கட்குத்
தம் முதல் ஆகும் சதாசிவம் தானே.

நான்காம் தந்திரத்திலே அருச் சனை என்ற பகுதியிலே பன்னிரண்டு பாடல்கள் காணப்படுகின்றன. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமைகளில் ஆண்டவனை அர்ச்சனை செய்து வணங்குவதும் ஒன்றாகும். இதனை ஒவ்வொருவரும் மனத்தாலும், வாக்காலும், உடம்பாலும் நறுமண மலர்களாலும் நாள்தோறும் இறைவனை வணங்குதல் வேண்டும் எனத் திருமூலர் கூறுகிறார்.

ஆண்டவன் திருவருளினால் மனிதர்களுக்குக் கிடைத்திருப்பது உடம்பு. உடம்பிலே சிறப்பாக விளங்குவது தலை. மனிதன் தனக்குக் கிடைத்திருக்கிற தலையை இறைவனுடைய திருவடியில் தாழ்த்தி வணங்குதல் வேண்டும். மனி தனின் தலை ஆண்டவனின் திருவடியிலே விழுந்து வணங்காவிட்டால் இந்த உடம்பு எடுத்ததனால் எதுவித பயனும் இல்லாமற் போய்விடும் என்பதை

ஆக்கையாற் பயன் என்? அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி எண்ணாத இவ்
ஆக்கையாற் பயன் என்?

எனத் திருநாவுக்கரசர் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

இறைவனுக்கு எந்தப்பூவை எடுத்து வழிபாடுசெய்யவேண்டும் என்பதைப் பற்றித் திருமூலர் அர்ச்சனை என்ற பகுதியிற் குறிப்பிட்டுள்ளார். மலர்களை நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ என நால்வகையாகப் பிரித்து இருக்கிறார்கள். அம்புஜம், நீலம், செங்கழுநீர், நெய்தல் முதலிய நீர்ப்பூக்களைத் திருமூலர் முதலில் எடுத்துக் கூறியுள்ளார். நீர்ப்பூக்களில் முதலில் அம்புஜம் ஆகிய தாமரை மலரைக் கூறியுள்ளார்.

"பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை"

என்பதே அப்பர் பெருமானின் வாக்கு ஆகும். தாமரை நீலோற்பலம், செங்கழுநீர், கருநெய்தல், கமுகம், குருக்கத்தி, மந்தாரம், தும்பை, மகிழம்பூ, சுரபுன்னை, மல்லிகை,

**கட்டுப்பாடில்லாமல் வாழ்கிறவன் கௌரவமில்லாமல் சாவான்.**

செண்பகம், பாதிரி, செவ்வந்தி ஆகிய மலர்களைச் சாத்தி இறைவனை அர்ச்சனை செய்தல் வேண்டும்.

அம்புஜ நீலம் கழு நீரணி செய்தல்
வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரம்
தும்பை வகுளஞ் சுரபுன்னை மல்லிகை
செம்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே

அர்ச்சனை செய்து இறைவனை நாளாந்தம் வழிபடுவதன் ஊடாகத்தான் அவன் என்கிற துவைத நிலை மாறித் தானாக இரண்டறக் கலக்கின்ற அத்துவிதநிலை உண்டாகிவிடும் என்கிறார் திருமூலர். தான் வேறு, அவன் வேறு என்று, இல்லாத நிலையிலே சாயுச்சிய முத்தியாகும். இத்தகைய சித்தியைப்பெற்ற சிவஞானியர்கள் தம்மைச் சிவம் நடாத்தும் என்றும் தாம் ஒன்றையும் எண்ணாதவர்களாக விளங்குவார்கள் என்பதையும் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

தானவனாக அவனே தானாயிட
ஆன இரண்டில் அறிவன் சிவமாகப்
போனவனன்பிது நாலா மரபுறத்
தானவனாகுமே ராசித்த தேவரே

சரியை கிரியை முதலிய நான்கு பாதங்கள் தனித்தனியாக நின்று பல படியாக விரிந்து இயங்கும் இயல்புடையன. இந்தவகையில் தவயோகி திருமூலதேவர் ஞானத்தில் யோகம் என்ற நெறியில் நின்று ஞானத்தில் ஞானம் தலைப்படுவதற்கு உபாயம் கூறுவதற்காகப் பல திருமந்திரங்களைக் கூறியுள்ளார். இவை ஞானயோக காரியம் எனப்படும். சரியை, கிரியை, யோகம் மூன்றினையும் கடந்து பின் ஞானத்திலுள்ள சரியை கிரியை என்ற படிகளையும் கடந்து அதற்கு அப்பால் ஞான யோகத்திலே தலைப்பட்டு நிற்பவர்களுக்கே திருமூலதேவர் நின்ற இன்ப ஆனந்த நிலையை அடையமுடியும். (தொடரும்...

**நான்மறை வேத நாயகனே!**

ஆண்டியும் நீ அரசனும் நீ ஞானகுருவும்
நீயே வேடுவனாய் நின்ற வேலவா!
வேண்டியுனை யடைய வெவ்வேறாய் நின்ற
நாயன்மாரின் கோல வடிவ அழகும் நீயே!
ஆண்டவனாம் சிவபரம் பொருளும் நீ
நான்மறை வேத நாயகனே!
தொண்டை மானாறு மேவும் செல்வச்
சந்நிதியுறை ஆறுமுகப் பெருமானே!!

*திரு இ. பஞ்சாமிர்தபாலன் அவர்கள்.*

இன்பத்திற்குத் தேன் அன்புக்கு ஒரு மனைவி.

உ

# உண்மையே உனை உயர்த்தும் ஏணி

## திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனாக விளங்கும் ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் சோதியான சிவபெருமானே முழுமுதற் கடவுள் அந்தச் சிவனையே வணங்கி வந்தித்துச் சிந்தித்துச் சேவித்து நிற்பது சைவசமயம்.

இப்படிப்பட்ட ஓர் அருமையான சைவசமயத்தில் பிறந்து பூமியில் வாழுகின்ற மனித இனம் ஒரு புனிதமான படைப்பு. அந்தப்புனிதம் நிறைந்த மனிதப் பிறவி எடுத்த நாங்கள் ஒவ்வொருவரும் பாக்கியசாலிகளே. 'அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். ஆகவே மகிமையும் மகத்துவமும் புனிதமும் புண்ணியமும் மிக்க இம்மனிதப் பிறவி எடுத்த நாம் உண்மையாக வாழ வேண்டும்.

மனிதன் எப்போதும் உண்மை பேசவேண்டும். எவ்வளவுதான் துன்பங்கள், துயரங்கள் வந்தாலும் இன்னல்கள் இடுக்கண்கள் வந்தாலும் உண்மை நிலையினின்றும் சற்றேனும் வழுவக்கூடாது. மனிதன் மனிதனாக வாழவேண்டும். மிருகமாக வாழக்கூடாது. ஆறறிவு படைத்த மனிதன் பகுத்தறிந்து இது நன்மை பயக்கத்தக்கது; இது தீமை பயக்கத்தக்கது என்பதை உணருந்தன்மையை விசேஷமாக உடையவன். அப்படியிருக்க ஏன் தவறிழைக்கின்றான்?

மனிதர்களே கொஞ்சம் ஒரு கணம் நின்று நிதானித்துச் சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் உண்மையானதா? இதன்மூலம் பிற உயிர்களுக்குத் தீங்கு நேரிடுமா? இது கட்டாயமாக முதலில் உணரப்படவேண்டும்.

மகாத்மா காந்திஜீயும் விவேகானந்தரும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும் சத்தியமே ஜெயம் என்று வாழ்ந்தவர்கள். உண்மையாக உலகத்திலே வாழ்ந்து காட்டியவர்கள். அவர்கள் வகுத்த பாதையிலே நாங்கள் ஏன் வாழக்கூடாது? உலகியலிலே கிடந்து உழன்று பொய்யான வாழ்க்கையை வாழுகின்ற மனித இனமே சற்று சிந்தித்துப்பார்! இந்த உடம்பு நிலையில்லாதது. என்றோ ஒரு நாள் நாமும் இறக்கத்தான் போகின்றோம். நீர்க்குமிழிக்கு நிகரான யாக்கையை வைத்துக்கொண்டு எவ்வளவு ஆட்டம்?

இது என்னுடைய காணி; இது என்னுடைய வீடு; இது என்னுடைய சைக்கிள் என்றெல்லாம் சொல்கின்றோம். உண்மையில் இவை என்னுடையதா? இல்லவே இல்லை. இடையிலே வந்தவை தாம் அவை.

'ஐயா, கட்டையை அசைக்க முடியாது' என்று கோபாவேஷத்தோடு சொல்லும் மனிதனைப் பார்த்து என்னவென்று சொல்வது. அந்த மனிதனின் உடம்பிலே இருக்கும் ஆத்மாவானது பிரிந்து சென்றவுடன் அந்தக் கட்டையை சுடலைக்குக் கொண்டுபோய் நெஞ்சாங் கட்டையை வைத்துச் சுட்டுப் பொசுக்கி விடும்போது ஒரு பிடி சாம்பர்தான் மிஞ்சும்.

இந்த உண்மையை மட்டும் மனிதன் உணர ஏன் மறுக்கின்றான் என்று தெரியவில்லை. எல்லாம் வல்ல ஆண்ட

உனக்கு நல்ல நண்பன் வேண்டுமா? நீ நல்ல நண்பனாக மாறிவிடு.

வன் எமக்கு முன்னறிவித்தல் கொடுக்கின்றான். அது என்ன தெரியுமா? எத்தனை பக்குவமாகப் பேணிப்பாதுகாத்த உடம்பு இது. முதலில் தலையில் நரை விழுகிறது. பின்பு பற்கள் ஆடுகின்றன. தோல் சுருங்கிவிடுகிறது. முதுகு கூனி வளைந்து விடுகிறது. நடப்பதற்கு ஊன்றுகோல் தேவைப்படுகிறது. இதனை இந்த மனித இனம் சிந்திக்க வேண்டும்.

"ஏ மனிதா! உனக்கு மூப்பு வந்து விட்டது. ஆகவே இறப்பு என்று ஒன்று வரும். அதனை முன்கூட்டியே உணர்வதற்குத்தான் இந்த அறிவுறுத்தல்கள். இதனை உணர்ந்து உன்னுடைய வாழ்க்கை முடிவடைவதற்குள் நன்மைகளைச் செய்து விடு" என்பதே ஆண்டவன் தரும் அறிவிப்பு.

சிலபேர் சுடலையில் வந்துநிற்கும் போது, "நாங்களும் ஒரு நாளைக்கு இங்கே வரத்தானே வேண்டும்" என்று தமக்குள்ளே பேசிக்கொள்வார்கள். பின்பு சுடலையை விட்டு வீட்டுக்கு வந்ததும் பழைய பல்லவிதான். ஒரு கொஞ்ச நேரந்தான் இந்தச் 'சுடலைஞானம்' வரும். இதை முற்றாக உணரவேண்டும்.

நாம் பிறக்கும்போது கொண்டு வந்ததும் இல்லை, போகும்போது கொண்டு போகப்போவதும் இல்லை. வீடு, வாசல், மாடு, மக்கள், மனை எல்லாம் இடை நடுவில் வந்தவையே. 'காதற்ற ஊசியும் வாராது காண் உன் கடைவழிக்கே' என்ற பட்டினத்தார் வாக்கு இதற்குப் பொருந்தும்.

எனவே நாங்கள் உண்மைக்குப் புறம்பாக நடக்கக்கூடாது. உண்மையான வாழ்வே உயர்ச்சியைத் தரும். இந்த நிலையற்ற உடம்பு இருக்கும்போதே நாம் உண்மையான வாழ்க்கை வாழத் தலைப்படவேண்டும்.

அரிச்சந்திர மகாராஜாவுடைய சரித்திரத்தைப் படித்துப்பாருங்கள். விசுவாமித்திரர் எத்தனை இடையூறுகள் செய்தும் அரிச்சந்திரன் உண்மைநிலையினின்றும் சற்றுந் தளரவில்லை. நாடு நகரிழந்து மனைவி மகனை விற்றுத் தானும் சுடலை காக்கும் நிலை வந்தபோதும் அவன் உண்மையே பேசினான். இதனை நாங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மனித வாழ்க்கையில் நேர்மை இருக்கவேண்டும்; நிதானம் இருக்க வேண்டும்; உண்மை இருக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ஓர் உயர்ந்த இலட்சியம் இருக்கவேண்டும். 'குறிக்கோள் இல்லாது கெட்டேனே' என்கின்றார் நாவுக்கரசர்.

ஆகவே, நாங்கள் வாழும்போது ஒரு நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு வாழ்கின்ற நிலையை நமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்ளுதல் மிகவும் அவசியம்.

சைவசமயத்திலே மட்டுந்தான் இந்த உண்மைநிலை உணர்த்தப்படுகின்றது. புராணங்கள், இதிகாசங்கள் கூட இந்த உண்மையை ஆணிவேராக எடுத்தியம்புகின்றன. நாங்கள் படித்தால் மட்டும் போதாது. படித்தவண்ணம் நடக்கவேண்டும். பொய்பேசக்கூடாது என்று படிக்கிறோம். ஆனால் வாழ்க்கையில் பொருள் தேடுவதற்காக எத்தனையோ பொய்களைச் சொல்லுகின்றோம். இதை எண்ணும்போது வெட்கமாயில்லை?

நாயைப் பாருங்கள்; ஒருவேளை ஒருபிடி சோறு போட்டதற்காகத் தன் வாலை ஆட்டி நன்றி தெரிவிக்கின்றது. மாட்டைப் பாருங்கள்; அது தனது எஜமானின் குறிப்பறிந்து நடக்கின்றது. காகத்தைப் பாருங்கள்; தன் இனத்தைக் கரைந்து அழைத்து ஒன்றாகத்தான் உணவு உண்கின்றது.

**துன்பத்தை எதிர்க்கத் துணியாதவர் வாழ்வில் தோல்வியே அடைவர்.**

ஆனால் இந்த மனிதன் மட்டும் செய்த நன்றியை மறந்து செயற்படுகின்ற போது அவனை எந்தவகையில் சேர்ப்பது.?

மனிதன் மனிதனாக வாழவேண்டு மாயின் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். 'உண்மையே உன்னை உயர்த் தும் ஏணி' என்பதை மறந்துவிடாதே.

இற்றைநாள்வரை வாழ்ந்தது போகட்டும். இனியாவது மனிதனாக வாழ் வோம் என்று பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த உறுதியிலிருந்து பிறழக்கூடாது. நாம் இப்போது அனுபவிக் கும் துன்பத்துக்கு யார் காரணம்? நாமே தான் ஊழ்வினையை அனுபவிக்கின்றோம். சுவரின்மீது ஒரு பந்தை விட்டெறிந்தால் அது நம்மிடமே திரும்பி வருவதைப்போல நாம் செய்தது நமக்குத்தான்.

'புண்ணியமாம் பாவம்போம் போன நாள் செய்த அவை மண்ணிற் பிறந் தார்க்கு வைத்த பொருள்' என்பதை நாம் உணரத்தவறக்கூடாது. பகவத்கீதையும் இதைத்தான் சொல்கிறது. சைவசமயப் புராணங்களும் இதைத்தான் சொல்கின்றன.

'வாழ்வாவது மாயம்; இது மண்ணா வது திண்ணம்' என்பதை முற்றாக உணர்ந்து மனித நேயத்துடனும் மனிதப் பண்புடனும் நாங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

முக்கியமாக நமது வாழ்க்கையில் நாம் சைவசமயிகள் என்பதை நிரூபிக்கு முகமாக நெற்றியில் திருநீறு அணிதல் அவசியமாகும். மேலான செல்வமாகிய விபூதியை அணிவதால் நாம் நீண்ட நாள் களுக்கு நோயின்றி வாழலாம். அடுத்தது இனியவார்த்தை பேசுதல் ஒரு நல்ல பழக்கமாகும். மேலும் மற்றவர் மனம் புண்படும்படியாகப் பேசுதல் கூடாது. இவற்றை நாம் கைக்கொள்ளும்போது உண்மைபேசும் வழக்கம் தானாகவே வந்துவிடும்.

ஆகவே, மனிதர்களாகப் பிறவி எடுத்த நாங்கள் ஒவ்வொருவரும் உண்மை யைப் பேசி உத்தமர்களாக வாழவேண் டும். மனிதன் மனிதப்பண்புகளுடன் மனித னாக வாழ்க்கையில் உயர்வுற வேண்டு மாயின் நாம் எத்தனை இடையூறுகள் வந்தாலும் பொய்பேசக்கூடாது. உண்மை பேசும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதற்கு என்ன வழி? எமது உள்ளத்திலே தெளிவு பிறக்கவேண்டும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் இவையெல்லாவற்றையும் தூக்கி வீசிவிட வேண்டும். எப்போதும் எந்நேரத் திலும் உள்ளம் தூய்மையாக இருத்தல் வேண்டும். 'உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்பது போலவும் 'பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்' என்பது போலவும் 'வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனைய உயர்வு' என்பதற்கிணங்கவும் நாம் வாழத் தலைப் பட்டோமேயானால் உண்மை நிலை வந்து உயர்ச்சியைத் தரும். செய்வீர்களா?

---

உலக ஆசைகள் அறவே அழிந்தாலன்றி மோகம் அகலாது. மோகம் அகன்றாலன்றி முக்தி கிடைக்காது.

"உலக வாழ்க்கையில் உண்மையான சுகம் கிடைக்காது" என்று பேரறிஞர்கள் அடிக்கடி சொல்லி வருகிறார்கள்.

---

**கல்விக்கு ஆபத்தாய் இருப்பது மறதியே.**

உ

# இறப்பை எண்ணி

## திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

மரணத்தை எண்ணி மனிதன் கலங்குவது இயல்பு. எனினும் எந்நேரமும் அவன் அதை நினைப்பதில்லை. பெரும் பாலும் மரணம் வரும் என்பதையே மறந்த வனாகத்தான் அவன் வாழ்கிறான். ஏதோ ஒரு காரணத்தால் சாவு நெருங்குகிறது என்ற எண்ணம் ஏற்படும்போது அவன் பயப்படுகின்றான். உதாரணமாக இன்றைய எமது நிலையைக் கூறலாம். போர் காரணமாக நாம் மரணத்தை எண்ணி அஞ்சுகின்றோம். மரணத்துக்கு இட்டுச் செல்லும் கொடிய நோயொன்று வந்து விட்டதை அறிய நேரும்போது மரணபயம் பிடித்துக்கொள்கிறது. இவைகளில்லா விட்டால் முதுமை நெருங்கும்போதுதான் சாகப்போகும் நாளைப் பற்றிய எண்ணம் ஏற்படுகிறது. நாம் மட்டுமல்ல, நாயன்மார்கள் கூட அப்படித்தானிருந்தார்களோ என்றோர் ஐயம் தேவாரங்களைப் படிக்கும் போது தோன்றுகிறது. சம்பந்தக்குழந்தை தன் தேவாரங்களிலே மரணத்தைப்பற்றி அதிகமாகப் பாடவில்லை. ஆனால் அப்பரடிகள் இறப்பைப் பற்றியும் அது வரும் நேரம்பற்றியும் பல தேவாரங்களிலே பாடியுள்ளார். அவர் முதுமையுற்று வாழ்ந்தவர் அதனால் 'மரணம் அண்மிக்கிறது' என்ற எண்ணம் அவருள்ளே ஏற்பட்டிருக்க வேண்டும். மரணத்திற்க்குத் தான் அஞ்சுவதாகவும் அந்தநேரத்தில் இறைவன்தான் வந்து காத்தருளவேண்டுமென்றும் அவர் பாடியுள்ளதைக் காணலாம்.

கால்கொடுத்து எலும்பு மூட்டிக்
கதிர்நரம்பு ஆக்கை யார்த்துத்
தோலுடுத்து உதிரம் அட்டித்
தொகுமயிர் மேய்ந்த கூரை
ஓலெடுத்து உழைஞர் கூடி
ஒளிப்பதற்கு அஞ்சு கின்றேன்
சேலுடைப் பழனம் சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்து ளானே.

என அவர் தமது அச்சத்தை வெளிப்படுத்தும் தேவாரத்தில் இந்த உடலை வர்ணித்திருப்பதைப் படித்து உணர்ந்து கொண்டால் எமது உடம்பின் மேல் நாம் கொண்டிருக்கும் பற்று, அதுபற்றி நாம் கொண்டிருக்கும் பெருமை, எல்லாமே இல்லாது போய்விடும். எலும்புகளை மூட்டி நரம்பு, தசைகளால் உடலாக்கி அதன்மேலே தோலை உடுத்து இரத்தத்தையும் கொடுத்து மேலே மயிர்த் தொகையால் கூரை வேய்ந்து என அவர் விவரிக்கும் உடலின் அழகு குறித்து மமதை கொள்வோர் எத்தனைபேர்? கூரையாக வேய்ந்த தொகுமயிரின் அழகு பற்றியே எவ்வளவோ பெருமைகொள்வோர் உள்ளனரே, இந்த உடலை உற்றார் கூடி அழித்துவிடுவார்கள். அதற்கு அஞ்சுகின்றேன் என நாவுக்கரசர் பாடியுள்ளார். அவர் மற்றொரு தேவாரத்தில்

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்

செத்தால் ஒருவரும் வந்து உதவ மாட்டார்கள். அந்த உடலைத் தீமூட்டி எரித்துவிட்டுச் சென்றுவிடுவார்கள் என்று உணர்த்துகிறார். எமது உடலில் நாம் கொண்டிருக்கும் உறவும் ஏனையோரின் உடல்களுடன் நாம் கொண்டாடும் உறவும் இறப்பின்போது இல்லாதுபோய்விடும் என்ற பேருண்மை இத்தேவாரங்களில் எமக்குப் போதிக்கப்படுகிறது.

ஒருவரின் மரணத்தின்போது இந்தத் தத்துவங்கள் எமது மனங்களுக்குத் தட்டுப்படவே செய்கின்றன. அடுத்தநாளே அவற்றை மறந்துவிடுகிறோம். இதையே சுடலைஞானம் என்கின்றனர். சுடலை ஞானம் மறக்கப்படவேண்டியதல்ல. ஆனால் ஞானம் இலகுவில் கிட்டாது. அதனாலேயே இத்தத்துவங்களை மறந்துவிடுகிறோம்.

மேற்கண்ட தேவாரங்களில் இந்த உடல் அழிவது பற்றியும் உற்றார் உதவி எதுவும் செய்யாது உடலை அழித்து விடுவது பற்றியும் கூறும்போது மற்றோர் எண்ணமும் தோன்றுகிறது. "நாம் இந்த உறவுகளை விட்டுப் பிரிந்துவிடுவோம். மீண்டும் அவர்களைச் சந்திக்கமாட்டோம்" என்ற எண்ணமும் எமக்கு இறப்பை எதிர் கொள்ள விருப்பமின்மையை ஏற்படுத்து கிறது. ஆழ்ந்து சிந்தித்தால் உறவு என்பது இவ்வளவுதானே. இதற்காகவா சாகத் தயங்குகின்றோம் என்ற எண்ணம் ஏற்படும். இதுவும் சுடலைஞானந்தான். எதுவுமே மரணபயத்தை எம்மிடமிருந்து அகற்றுவதில்லை.

எல்லோருமா மரணத்தைக்கண்டு அஞ்சுகிறார்கள்? இல்லையே, "அஞ்சு பவனுக்கு சத மரணம். அஞ்சாதவனுக்கு ஒரு மரணம்" என்று துணிவுடன் வாழ்பவர் களுமுள்ளனர். இதைவிட வாழ்க்கையில் வெறுப்புற்று மரணத்தைத் தேடிப்போகின்ற வர்களும் இருக்கின்றார்கள். இத்தகைய மனோநிலை அவர்களுக்கு ஏதோவோர் உணர்ச்சியின் உச்சக் கட்டத்திலேயே ஏற்படுகிறது. அந்த உணர்ச்சிக் கொந் தளிப்பு சிறிது தணிய அவர்கள் இறக்க விரும்பமாட்டார்கள்.

எனது பாட்டியின் வீட்டிலிருந்து கிணறு மிகுந்த தூரத்தில் இருந்தது. முற்காலத்தில் எல்லா வீடுகளிலும் அப்படித்தானிருக்கும். "ஏன் பாட்டி இவ்வளவு தூரம்போய்த் தண்ணீர் கொண்டுவர வேண்டியிருக்கிறதே. கிட்ட கிணறை வெட்டியிருக்கலாமே" என்று கேட்டேன். "தற்கொலை செய்பவர்கள் பெரும்பாலும் கிணற்றிலேதான் விழுவார்கள். அவர்கள் முடிபுசெய்தபின் இவ்வளவு தூரம் நடந்து போகும்போது கோபம் குறைந்துவிடும். பிறகு சாக மனம் வராது அதற்காகத்தான் இப்படித் தூரத்திலே கிணறு வெட்டுவது என்று பாட்டி காரணம் சொன்னாள். கிணறு தூர வெட்டப்பட்டதற்கு அதுதான் காரணமோ அல்லவோ ஆனால் காலங்கடத் தப்பட தற்கொலை செய்ய முடிபெடுத்த மனோநிலை மாறும் என்பது உண்மை. எனவே அவர்களுக்குக்கூட மரணபயம் இருக்கவே செய்கிறது.

சாகும்போது உதவ யாருமே யில்லை என நாம் நினைக்கலாம். ஆனால் நாவுக்கரசர் அப்படி நினைக்கவில்லை.

**கேள்விப்படுகின்ற எல்லா விஷயங்களையும் நம்பிவிடாதீர்கள்.**

சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல்கண்டங் கொண்டடியேன் என்செய் கேனே

என்று அதே தேவாரத்தில் தொடர்ந்து பாடியுள்ளார். "எத்தந்தை எச்சுற்றத்தார்?" என முதலில் வினா எழுப்பியவர் "என்றன் அத்தா" எனத் திருவானைக்காவுடைய செல்வனை உறவுகொண்டாடுகிறார். அவருடைய பொற்பாதத்தை அடைந்தால் அதன்பின் துன்பம் ஏது? அவர் திருஅங்க மாலையிலும் உயிர்போகும் வேளையில் இருக்கும் உற்றவர் பற்றிப் பாடியுள்ளார்.

உற்றார் ஆருளரோ- உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் ஆருளரோ!

உயிரை யமன் கொண்டுபோகும்போது குற்றாலத்திலே குடியிருக்கும் கூத்தன்தான் எமக்கு உற்றவன். நாம் உறவு என்று எண்ணியிருக்கும் எவரும் அந்நேரம் உதவமாட்டார். அப்படி உற்றவனாயிருக்கும் இறைவனிடமும் அவர் சில வேண்டுதல்கள் செய்கின்றார். அதனை அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

# தவத்திரு வே. முருகேசு சுவாமி அவர்களின் 11ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வு

மேற்படி சுவாமி அவர்களின் பதினோராம் ஆண்டு குருபூசை 12-04-2008 சனிக்கிழமை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

குருபூசைத்தின நிகழ்வின் ஆரம்பத்தில் ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற அபிஷேக பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற விஷேட நிகழ்வுகளுடன் நிறைவு பெற்றது.



விஷேட நிகழ்வின் வரிசையில் கவிமணி க. ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்களின் இசைச்சொற்பொழிவும் அதனைத் தொடர்ந்து கலாபூஷணம் வ. செல்லத்துரை அவர்களின் பக்திப் பாடல் நிகழ்வும் நடைபெற்று முருகேசு சுவாமிகளின் அடியார்களால் உருவாக்கப்பட்ட அறுபத்துமூவர் குருபூசை மண்டபத்தில் அறுபத்துமூவர் குரு பூசையும் இடம்பெற்றது.

பொய் சொல்வதைவிட மௌனமாக இருப்பது சிறந்தது.

உ

# அன்பின் வழியது உயிர்நிலை

**திரு நா. நல்லதம்பி அவர்கள்**

அன்பு என்பது மனித மனத்திலே தோன்றுகின்ற ஒரு மெய்ப்பாடு எனலாம். அன்பின் வழியிலேதான் உயிரினம் இயங்கிக்கொண்டிருக்கிறது. 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பார் தெய்வப்புலவர்.

அன்பு (அல்+ பு) என்பதன் பொருள், 'தான் அற்ற நிலை' என்பதாம். அது பிறர்நலம் பேணுகின்ற ஒரு நிலையைக் குறிக்கிறது. அதாவது ஒரு உயிர் இன்னொரு உயிரோடு சம்பந்தமுடைமையைக் காட்டிநிற்கிறது என்பதாம்.

ஒருவர் தமக்கே உரியவராக இருப்பாராயின், அவரிடத்தில் 'அன்பு' இல்லை என்பது கருத்து. அதனாலேதான் 'அன்பிலார் எல்லாந் தமக்குரியர்' என்கிறார் திருவள்ளுவர்.

'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்று அன்பின் பண்பு பற்றிக் கூறுவதனால், என்பு மாத்திரமல்ல, ஒருவருக்கொருவர் உயிரையுங்கொடுப்பர் என்பது புலப்படுகிறது. எதனையும் மற்றவர்களுக்கு உரியதாக்கி, அதனால் இன்புற்று வாழும் நிலைபெற்றவர்களே 'அன்புடையார்' எனப்படுகின்றனர் எனலாம்.

அன்பு அகத்திலே இருப்பதை அவர்களது செயற்பாடுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்; அது மறைத்து வைக்க முடியாதது. அதனால்,

அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்; ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

என்கிறார் திருவள்ளுவர். இறைவனிடத்திலே காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நிற்பார்கள் மெய்யடியார்கள். தனது அன்புடைய மனைவியும் மக்களும் தன்னை அடையாளங் காணக்கூடாது என்று எண்ணியிருந்தவன் நளமகாராசன். அவன் தனது பிள்ளைகளைக் கண்டபோது, அவனது கண்களிலிருந்து வெளிப்பட்ட கண்ணீர் அவனது பிள்ளைப் பாசத்தைக்காட்டி நின்றது! அகத்து அன்பைப் புன்கண் நீர் காட்டிக்கொடுத்துவிட்டது; மறைக்க முடியவில்லை.

இந்த அன்பு என்ற சொல்லுக்கு ஒத்தகருத்துள்ள பல சொற்கள் வழக்கில் இருப்பதை நாம் அறியலாம். பாசம், பற்று, காதல், நேசம், உறவு, ஈடுபாடு, இச்சை, விருப்பம், வேட்கை, பக்தி என்னும் பதங்களைக் கூறலாம். இவை பயன்படும் இடங்கள் வேறுபடும். உதாரணமாக, சகோதரபாசம், தேசப்பற்று, காதலர் இருவர், நேசநாடுகள், உறவுள்ளங்கள், பொருளிச்சை, விரும்பியதொழில், அறிவு வேட்கை, கடவுட் பக்தி என்று கொள்ளலாம்.

இவற்றுள் பக்தி என்பது இறைவனிடத்தில் வைக்கும் அன்பையும் ஏனைய சொற்கள் மக்களது வாழ்வியல் முறையிலான அன்பையும் காட்டி நிற்பனவாகும்.

***வாழ்வியல் அன்பு***

அன்பு கலவாத உயிர்வாழ்க்கை உயர்திணையிலும் இல்லை; அ∴றிணையிலும் இல்லை. மக்களோ அன்றி வேறு எந்த உயிரினமோ அன்பினால் இன்புற்று வாழ்வதனாற்றான் உலகம் நிலைபெற்று இயங்கிக்கொண்டிருக்கிறது.

உயிருக்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பு அன்போடு இயைந்தது. அன்பு

**நீ குற்றம் புரிந்திருந்தால் ஒப்புக்கொள். இல்லையேல் பல பொய்கள் சொல்வாய்.**

ஏனைய உயிர்களிடத்தில் ஆர்வத்தை உண்டுபண்ணுகிறது. அந்த ஆர்வமானது யாவரும் நண்பர் என்ற நிலையை நமக்குக் கொண்டுவந்து சேர்க்கிறது.

அன்போடியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடியைந்த தொடர்பு.

அன்பீனும் ஆர்வமுடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு

இனி உலகவாழ்வில் (இல்லறம்) இன்புற்று அறநெறியில் வாழ்வதற்கும் பின்னர் பேரின்பநிலை பெறுவதற்கும் உறுதுணையாக அமைவது அன்புதான்; பகை நீங்கி வாழ்வதற்கும் அன்புதான் காரணமாகிறது.

அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. என்பது வள்ளுவர் வாய்மொழியன்றோ.

அன்பு இல்லாத உடம்பினால் அல்லது உறுப்புக்களினால் என்ன பயன், அகத்திலே அன்பு இல்லாதபோது? என வினவுகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

புறத்துறுப் பெல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பில் லவர்க்கு.

***அருளியல் அன்பு***

இறைபக்தி அல்லது இறைஅன்பு இருவகைப்படும். இறைவனிடத்தில் அன்புசெலுத்தி ஒருவன் இல்லறமென்னும் நல்லறம் ஆற்றுவதற்கு உதவும் அன்பு ஒருவகை.

இறைவனிடம் மிகுந்த அன்பு வைத்து அதன் பெறுபேறாகத் திருவருள் கைகூடப்பெற்று மறுமை இன்பம்பெறச்செய்யும் அன்பு இரண்டாவது வகை. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை.

அருள் என்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியான் உண்டு. என்கிறார் வள்ளுவனார்.

செவிலித்தாய் என்கின்ற வளர்ப்புத்தாய் குழந்தையை வளர்த்தெடுப்பதற்கு உதவுவதுபோல, அன்புவாழ்க்கை வாழ்வதற்குப் பொருட்செல்வம் உதவுகின்றது என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

இந்தப்பொருட்செல்வம் என்பது அன்பில்லாதாரிடத்தும் உண்டாகியிருக்கலாம் என்பதனால், அருட்செல்வம் பெறுவதில் அன்பு முக்கியபங்கு வகிக்கிறது என்பதை உணர்வோமாக.

அருள்நெஞ்சுடையவர்கள் எவ்வித இடையூறுகளையும் பொறுத்து ஏனைய உயிர்களைப் பாதுகாத்து வாழ்வார்கள்; அவர்கள் தம்முயிருக்காகப் பயங்கொள்ள மாட்டார்கள்.

பொருள் இல்லாதவர்கள் ஒருகால் துன்பப்பட்டாலும் காலம் மாறி பொருளுள்ளவர்களாக மாறலாம். ஆனால், அருள் இல்லாதவர்கள் கெட்டே போவார்கள்; ஒருபொழுதும் உய்திபெறமாட்டார்கள்.

பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள் அற்றார்
அற்றார் மற்று ஆதலரிது என்பது குறள்.

**போதும் என்ற மனப்பான்மை தீராத செல்வம் அழியாத புதையல்.**

*இறை அன்பு*

தான் வேறு, இறைவன் வேறு என்ற நினைப்பின்றி இறைவன் தன்னகத்திலே இருக்கிறான்; எல்லாம் அவன் செயல் என்ற நிலையிலே செலுத்தப்படும்போதுதான் இறையருள் பிறக்கிறது.

பொன்னும் பொருளும் வேண்டி இறைவனிடம் அன்பு செலுத்தாமல் அன்பும் அறனும் அருளும் வேண்டி இறைபக்திகொள்ளவேண்டும்; அதுவே சிறந்த மார்க்கமாகும்.

ஆக, நமது கடமை இறைவனிடம் அன்பு செய்வது மாத்திரம்; எமக்கு எது வேண்டுமோ அதை இறைவன் தருவான்; வேண்டிப்பெருவதற்கு எதுவும் இல்லை எனலாம்.

மாணிக்கவாசகர் இறைவனிடம் அன்பு செலுத்துவது ஒன்றே வேண்டி நிற்பது காணலாம்.

உற்றாரை யான் வேண்டேன்
ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனி அமையும்
குற்றாலத் தமர்ந்துறையும்
கூத்தா! உன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக்
கசிந்துருக வேண்டுவனே எனகிறார்.

காரைக்கால் அம்மையாரும்,

'பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும்போது உன்
அடியின் கீழ் இருக்க...' வேண்டுமென்றே கேட்கின்றார்.

இறவாத இன்ப அன்பு வேண்டுகிறார்; அந்த அன்பு இறைவன் தந்த அன்பு; அது அருள்கலந்த அன்பு; பிரதிபலன் கருதாத பொதுநோக்குடைய அன்பு.

தந்தது உன்றன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்?
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்; யாதுநீ
பெற்ற தொன்றென்பால்.

என்று கேட்கிறாரே மாணிக்கவாசகர்! அதுதான் பேரின்பம்; இறையன்பு.

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சே! அரன்நாமம்
கேளாய் நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறம்அருளிக்
கேளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே

என்று சிவபெருமானுக்கு ஆளாகி அன்பு செலுத்துகிறார் திருஞான சம்பந்தர்.

**பெற்றோரை வேதனைப்படுத்துபவர் சொர்க்கம் புகமாட்டார்.**

மேலும், தொண்டுசெய்து நாளாறில் பொங்கிய அன்பினால் கண்ணிடந்து அப்புகிறாரே திண்ணனார்! இவர் இறைவனிடம் என்ன பிரதிபலன் பெற்றார்? அவருடைய அன்பைப் பெற்று அவருக்குப் பக்கத்தில் என்றும் இடம்பிடித்துக்கொண்டதுதான்!

சிவபெருமானுக்கு நிவேதிக்கப்பெற்ற காட்டுப்பூவும் இறைச்சிப்படையலும் உமிழ்நீருங் கண்ட சிவகோசரியார் தன் தலையிலே அடித்து வருந்துகிறார். அவருக்கு இறைவன் கனவிலே காட்டியது இதுதான்.

அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு அறிநீ என் றருள் செய்வார்

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பர். பெற்றோர் தம் மழலைகள் சிறு கைகளால் அளாவிய உணவை உண்டு மகிழ்வடைகிறார்கள்; அன்பினால்!

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என் னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி"

எனக் கண்ணப்பனுக்கும் இறைவனுக்குமிடையில் உள்ள அன்புப் பிணைப்பு, தனக்கும் இறைவனுக்குமிடையில் இல்லையே, என்று சொல்வதும் உணரத்தக்கது. பொதுவாக இறைஅன்பு என்னும் பக்திநிலை கொண்ட அடியார்கள் பற்றிக் குறிப்பிடும்போது, சேக்கிழார் பெருமான்,

பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்.
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ!

என்றெல்லாம் கூறியிருப்பது நம் சிந்தனைக்குரியது.

ஈசனிடத்தில் நாம்பெறவேண்டியது அருள்; அருளைப்பெற நாம் அவனிடத்தில் அன்புசெய்ய வேண்டும். ஆக, அவனருளாலே அவன்தாள் வணங்கிப்பெறுவது அவன் அருளைத்தானே! அதாவது சிவனைத்தான்! சிவனைப்பெற அன்பு வேண்டும். எனவே, 'அன்பேசிவம்' என்ற முடிபுக்கு வருகிறார் திருமூலநாயனார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே (திருமந்திரம்)

---

கேட்கவேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும், அடக்கமில்லாதவனுக்கும் தீய புத்தியுள்ளவனுக்கும் பிறர் சொல்லும் நல்லுரை காதில் ஏறவே ஏறாது. மேதாவியாக இருந்தாலும் அடக்கமில்லாதவனுக்கு அறத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. பருப்பின் சுவையைக் கரண்டி அறியாததுபோல, பண்டிதனை அடுத்து இருந்தாலும், மந்த புத்தியுள்ளவனுக்கு அறத்தின் இயல்புகளைத் தெரிந்துகொள்ள முடியாது.

---

தூய மனமுடையவன் எல்லாவற்றையும் தூயதாகவே காண்பான்.

உ

# ஆச்சிரமக்கோட்பாடு

திரு சி. நற்குணலிங்கம் B.A அவர்கள்

பல்வேறு வகையான கோட்பாடுகள் ஆரம்பகாலம் முதல் இன்றுவரையும் கூட மக்களை நெறிப்படுத்துமுகமாக எழுந்துள்ளன. மனிதனை நெறிப்படுத்த எழுந்தவையே கோட்பாடுகள் ஆகும். அந்த வகையில் ஆச்சிரமக் கோட்பாடும் மனிதனை நெறிப்படுத்த எழுந்தவையாகும்.

இவ்வுலகில் பிறந்த மனிதர்கள் எல்லோரும் குறிப்பிட்ட ஒழுங்குமுறையைத் தழுவி வாழ்ந்து அவ் வாழ்க்கையின் பயன்பாடாக இறைத்துவத்தை அடைவதே ஆச்சிரமக் கோட்பாட்டின் பிரதான நோக்கமாகும். இந்நோக்கம் இக் கோட்பாட்டிற் பொதிந்துள்ளதால் இக் கோட்பாடானது "வையத்துள் வாழ்வாங்கு வாழ நெறிகாட்டும் கோட்பாடு" எனச் சிறப்பிக்கப்படுகின்றது. தர்மசாஸ்திரங்கள் இக் கோட்பாட்டை "இலட்சிய வாழ்க்கை நெறி" எனக் குறிக்கின்றன.

வாழ வழிகாட்டும் இக்கோட்பாட்டில் படிநிலைப்படுத்தப்பட்ட நான்கு படிநிலைகள் உள்ளன.

1) மாணவப் படிநிலை (பிரமச்சரியம்)
2) இல்வாழ்வான் நிலை (கிருகஸ்தம்)
3) வனத்தில் துறவுக்கு ஆயத்தமான நிலை (வனப்பிரஸ்தம்)
4) பூரண துறவுநிலை (சந்நியாசம்)

வாழ்க்கை வாழ்வதற்கே என்பதனால் எப்படியும் வாழலாம் என்ற கொள்கையை விடுத்து, வாழ்க்கை வாழவேண்டிய ஒழுங்குமுறைகளை இக்கோட்பாடு படிநிலைப்படுத்தித் தருவதனால் இதன் வழி ஒழுகி வாழ்தலே சிறப்பு.

தர்மசாஸ்திரங்கள் பதினான்கு வகையான கடமைகள் பற்றிக் கூறியுள்ளன. 14 வகையான கடமைகளில் வாழ்க்கைப் படிநிலைகள் பற்றிய விபரங்களை ஆச்சிரம தர்மம் எனும் தலைப்பில் வழங்கியுள்ளது.

படிநிலையான வாழ்க்கைமுறையின் நான்கு படிநிலைகளில் முதற் படிநிலையான பிரம்மச்சரியம் எனும் மாணவ படிநிலையை நோக்கின், 5வயது முதல் 18வயதுவரை அறிவுவிருத்தி ஏற்படும் மாணவப்பருவமாகும். இக்காலம் வாழ்க்கைப் பருவத்தில் மிக முக்கிய காலமாகும். அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞ்ஞானம் பெறும் கல்விமுறைக்கு ஒருவன் தன்னைத் தயார்ப்படுத்துவதற்காகக் குருவின் அருகில் சென்று கல்வியில் முழுப்பயனையும் பெறும்பொருட்டு பிரம்மச்சாரியாகவிருந்து, கல்வியறிவை இக்காலத்தில் பெறவேண்டும் என்று கூறப்படுகின்றது. குருவை மதித்து, குருவிடமுள்ள மெய்ஞ்ஞான அறிவைப் பெற்றுக்கொள்வதே மாணவ காலத்தின் முக்கியவிடயமாகும். மாணவன் தனது உடல் உழைப்பினைக் குருவிற்குக் காணிக்கையாக வழங்கி மெய்ஞ்ஞான அறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அடுத்த மூன்று கால வாழ்க்கைக்கும் தன்னை மாணவகாலத்தில் ஒழுங்குபடுத்தி, முக்கிய ஒழுக்கமான பிரம்மச்

சரியத்தை முழுமையாகக் கடைப்பிடிப் பவனே மாணவநிலையை அதாவது மாண வப் படிநிலையை சரிவரக் கடந்தவனாகக் கருதப்படுவான்.

கிருகஸ்தம் எனப்படும் இல்வாழ் வான் நிலையை நோக்கின் பிரமச்சரியப் படிநிலையிலிருந்து மீள்பவன் தன் இல்லத் திற்கு வந்து தான் கற்றவற்றைப் பயன் படுத்தி இல்லில் ஆற்றவேண்டிய அறநெறி களை மேற்கொள்ளும்வகையில் அதற் கேற்றாற்போல் இல்லாளைத் தெரிவு செய்து இல்லத்திலிருந்து அறமாற்றும் நிலை இல்வாழ்வான்நிலை எனப்படும்.

இல்வாழ்வான் பழிபாவத்திற்கு அஞ்சிப் பொருள் ஈட்டவேண்டும். இல்வாழ் வான் உடல், உள்ளம், பொருட்கள் என்ப வற்றால், இயல்புடைய மூவர்க்கும் உதவ வேண்டும். தர்மசாஸ்திரங்கள், காற்றை இல்வாழ்வானுக்கு ஒப்பிடுகின்றன. அதா வது காற்றினைப் போன்று எல்லா ஜீவராசி களின் உயிர்வாழ்க்கையிலும் இல் வாழ் வான் உதவவேண்டும் எனக் கூறுகின்றன.

வானப்பிரஸ்தம் எனப்படும் காட் டில் வாழும் நிலையை நோக்கின், நான்கு படிநிலைகளில் இறுதிப் படிநிலையை அடைவதற்கு முன்பயிற்சிபெறும் ஒரு படி நிலையாகக் காட்டில் வாழும்நிலை கூறப்படுகின்றது. இது இல்லறத்தையும், துறவறத்தையும் இணைக்கும் ஒரு பால மாக அமைந்துள்ள படிநிலையாகக் கருதப்படுகின்றது. இப் படிநிலையில் இல் வாழ்வான் தன்னை ஆட்படுத்தும் காலம் முதுமைக்காலமாகும். முதுமையாளனாக வனத்தில் சஞ்சரிப்பவன் வெறுமையான தொரு சூழலில் விடப்பட்டவனாவான். சந்நி யாச நிலையை அடைவதற்கு இப் படிநிலையில் பெற்றுக்கொள்ளும் பயிற்சி கள் பெரிதும் துணைபுரிகின்றன.

ஆச்சிரமக் கோட்பாட்டின் இறுதிப் படிநிலையான சந்நியாசம் எனப்படும் துறவு நிலையை நோக்கின், எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் ஒருமுகப் பட்டு, இம்மூன்றையும் இறைவனுக்காக்கிக் கொள்ள காட்டில் வாழ்ந்த வாழ்க்கைமுறை யின் அனுபவங்கள் வாயிலான துறவுக் கான பயிற்சிகளைப் பயன்படுத்தி இறுதி வரை வாழ்தலே சந்நியாசம் எனப்படும்.

வனப்பிரஸ்த நிலையில் முதுமை, தனிமை, வறுமை, வெறுமை எனும் சூழ்நிலைகள் உலகியற்பற்றைப் படிப்படி யாகக் குறைத்து மனிதனைத் துறவு நிலைக்கு பயிற்றுவித்துள்ளது. உலகியல் வாழ்வில் இருந்துகொண்டு முத்திக்கு வழிகாட்டும் துறவுநிலையை இலகுவில் ஒருவன் அடைந்துகொள்ள முடியாது.

வனப்பிரஸ்த நிலையில் உலகியற் பற்றை இழந்த மனிதன் நல்வினை, தீவினைகளுக்குக் கட்டுப்படாது எதுவாயி னும்சரி என்னும்வகையில் உலகியற்பற்றை விடுத்து இறைத்துவம், இறைபற்று மேலோங்கும் நிலையை அடைதலே கோட்பாட்டின் இறுதிப்படிநிலையான சந்நி யாச நிலையை அடைதலாகும்.

ஆன்மவிடுதலையை ஏற்படுத்தி ஒவ்வொரு மனிதனையும் முத்திக்கு இட்டுச் செல்ல மனிதனை நெறிப்படுத்தும் நோக் கில் ஆச்சிரமக்கோட்பாடு கருத்துக் கூறியுள் ளது. அத்துடன் மாணவப்படிநிலை, இல்வாழ் வான்நிலை, காட்டில் வாழும்நிலை, துறவு நிலை எனும் நான்கு நிலைகளையும் கடப்பவனே "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவனாகக் கருதப்பட்டு, இறைத் துவம் எனும் பெரும்பேற்றைப் பெற்றவனாக வும் கருதப்படுவான் என ஆச்சிரமக் கோட் பாடு குறிப்பிடுகின்றது. எனவே ஆச்சிரமக் கோட்பாட்டின் சிறப்பை உணருவோமாக.

**சோம்பலினால் உடல் மட்டுமல்ல மனமும் கெட்டுவிடுகிறது.**

உ

வாரியார் பக்கம்

# மண் சுமந்த மேனியர்

**வாரியார் சுவாமிகள்**

மதுரையில் நாடோறும் அவித்த பிட்டை ஆலவாய் அண்ணலுக்கென்று நிவேதித்து, அதனை விற்று வாழ்ந்தனள் வந்தி. அந்த அம்மைக்கு மகப்பேறு இல்லை. ஆதனால், அப்பேறைப் பெற்றனள். அந்த அம்மை சோமசுந்தரக் கடவுளிடம் இடையறாத மெய்யன்பு பூண்டவள்.

வைகையாற்றில் பெருவெள்ளம் சிவபெருமான் ஆணையால் பெருகியது அரிமர்த்தன பாண்டியன் கரையை உயர்த்துமாறு கட்டளையிட்டனன். செல்வம் உடையவர்கள் ஆள்வைத்துக் கரையை உயர்த்தினார்கள். ஏழைகள் தாமே சென்று கரையை மேடு செய்தார்கள். வந்திக்குப் பணமுமில்லை ஆளுமில்லை. என் செய்வாள்? ஏங்கினாள்; இரங்கினாள்; மன்னவன் ஆணையால் நடுங்கினாள்; அழுதாள்; தொழுதாள்;

*துணையின்றி மக்க ளின்றித் தமரின்றிச் சுற்றமாகும்*
*பணியின்றி யேன்று கொள்வார் பிறரின்றிப் பற்றுக் கோடாம்*
*புணையின்றித் துன்பத் தாழ்ந்து புலம்புறு பாவி யேற்கின்*
*றிணையின்றி யிந்தத் துன்பம் எய்துவ தறனோ எந்தாய்.*

*தேவர்க்கும் அரிய னாய தேவனே அன்ப ராவார்*
*யாவர்க்கும் எளிய னாகும் ஈசனே வேந்த னாணைக்*
*காவற்செங் கோலார் சீற்றங் கடுகுமுன் கூலி யாளாய்*
*ஏவற்செய் வாரைக் காணேன் ஏழையேன் இனியென் செய்வேன்*

*-திருவிளையாடற் புராணம்-*

என்று தளர்ந்த வயதுடைய வந்தியம்மை உள்ளந் தளர்ந்தாள் இறைவன் ஏழை பங்காளன். ஏழை- பெண்; பங்கு ஆளன்- உமையை இடப்பாகத்தில் வைத்து ஆள்பவர். இப்போது ஏழையாகிய வந்தியின் பங்குக்கு ஆளாக வருகின்றார். என்னே அவருடைய கருணை? கைலையில் இருந்தபடியே வந்தியின் பங்குக்குக் கரையைச் சங்கல்ப்பத்தினாலேயே உயர்த்தி விடலாம். வந்திக்கு ஆள்வேண்டும் என்ற கவலைதான். வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய் என்றபடி எம்பெருமான் கூலியாளராக வந்தார். அழுக்கடைந்த ஒரு பழந்துணியையுடுத்தி சும்மாடுமேல் ஒரு பழங்கூடையைக் கவிழ்த்துத் தேய்ந்த மண்வெட்டியைத் தோள்மேல் வைத்துக்கொண்டார். வேதமுடிவாகிய அதர்வ சிகையில் விளங்கும் அவர் திருவடிக்கமலம் மதுரையின் வீதியில் படுகிறது. நிலமகள் செய்த பெருந்தவம். "கூலியோ கூலி" என்று ஓலமறைத் திருமொழிபோல் வாய்விட்டுக் கூவுகின்றார். கண்ணீர்க் கடலில் மூழ்கியிருக்கும் வந்தியம்மை வீட்டுக்கு நேராக வந்து "கூலியோ கூலி" என்று கூவியருளினார். தாய்தந்தையில்லாத தற்பரனை வந்தி கண்டாள்; ஆனந்தம் கொண்டாள்.

"அப்பா! இப்படி வா! உன்னைப் பார்த்தால் நன்றாக சுகத்திலிருந்து வந்தவனைப்போல் காண்கிறதே. ஏனப்பா, இப்படி கூலியாளாக வந்தனை?" என்று

வினாவினாள். கூலியாளாய் வந்த குருபரன், "பாட்டி! எனக்குத் தாய்தந்தையர் ஒருவருமில்லை. சுடலையில்தான் இருப்பேன். பேய்கள்தான் எனக்கு உறவு. என் மனைவி அன்னபூரணி; அறம் வளர்த்தாள்; ஆனால் என்னை பிஷாடணஞ்செய்ய விட்டுவிட்டாள். இன்னொருத்தி தலையின்மீது ஏறிக்கொண்டாள். மூத்த பிள்ளைக்கு மகோதரம். ஊரில் என்ன விசேடமானாலும் அவன் போய்த்தான் ஆகவேண்டும். இளையபிள்ளை தகப்பன் சுவாமியாகிவிட்டான். என் செய்வேன்? விடத்தையும் உண்டேன். எனக்கு மரணம் இல்லையென்று எல்லோரும் கூறுகின்றனர். அதனால், மண்ணெடுத்துப் பிழைக்கலாம் என்று வந்தேன்" என்றார்.

வந்தியம்மை, "அப்பனே! பாவம்! உன்னைப் பார்க்க மனம் மகிழ்ச்சியடைகிறது. இந்த ஊரில் பெரும் பெருந்தனவந்தர்கள் இருக்கின்றனர். அங்கெல்லாம் போயிருந்தால் நல்ல கூலி கிடைத்திருக்கும். நான் பரம ஏழை. என்னிடம் வந்துசேர்ந்தாய். என்னிடம் காசுபணம் இல்லை. பிட்டு வியாபாரம் செய்பவள். பிட்டைத்தருவேன்; பிட்டுக்கு மண்ணெடுக்க வேணும். உனக்கு உடன்பாடா?" என்று கேட்டாள். கூலியாள், "பாட்டி! மிகவும் நல்லது! நீ காசுபணந்தந்தால் நான் என்ன, அப்படியே தின்னமுடியாதன்றோ? கடையில் போய் ஆகாரம் வாங்கியருந்த வேண்டும். நீ பிட்டாகவே தந்துவிட்டால் கடைக்குப் போகும் வேலையில்லாது போகும். பிட்டுக்கே மண் சுமக்கிறேன்" என்றார்.

வந்தியம்மை, "அப்பனே! இன்னொரு சங்கதி. உதிர்ந்த பிட்டைத்தான் உனக்குத் தருவேன். உதிராத பிட்டை விற்று நாளைக்கு அரிசிவாங்க வைத்துக்கொள்வேன். உனக்கு சம்மதமா?" என்றாள். எம்பிரான், "பாட்டி! மிக நல்லது. உதிராத பிட்டைத் தந்தால் நான் உதிர்த்துத்தானே சாப்பிட வேண்டும். உதிர்ந்ததைத் தந்தால் உதிர்க்கின்ற வேலையில்லாது போகும். எல்லாம் உதிர்ந்து போகும். அந்தக் கவலை உனக்கு வேண்டா. இப்போது சிறிது கொடு" என்றனர்.

வந்தியம்மை ஐந்தெழுத்தை செபித்தவண்ணமே அவித்த தூய்மையும் இனிமையும் உடைய பிட்டை எடுத்து "அருந்து அப்பா" என்று இட்டாள். பெம்மான் சும்மாட்டுத் துணியை விரித்து ஏந்தி "ஆலவாய் அப்பனுக்கு இது ஆகுக" என்று கூறித் தலையை அசைத்து அசைத்து அமுது செய்தார். ஆலமுண்ட நீலகண்டர் அடியாள் தந்த பிட்டைப் பெருமகிழ்ச்சியுடன் உண்டு, "பாட்டியம்மா! இனி நான் போய் மண் சுமப்பேன்; இன்னும் மாவு இருந்தால் பிட்டு அவித்து வையும்" என்று கூறிவிட்டு வைகைக் கரையை யடைந்தார். பதிவு செய்யும் புத்தகத்தில் "வந்தியின் ஆள் சொக்கன்" என்று பெயர் பதிவு செய்தார்.

வெட்டுவார்; மண்ணை முடிமேல் வைப்பார்; பாரம் என்று கீழே கொட்டுவார்; குறைத்து எடுப்பார்; சும்மாடு விழத் தட்டுவார்; சுமையிறக்கிச் சும்மாட்டைத் தலைபடியக் கட்டுவார்; மண்ணை அள்ளிப் போய் வேற்றுப் பங்கில் கொட்டுவார்; அதனால் சிறிது உயர்ந்த கரையை உடைப்பார்; ஆடுவார்; இனிது பாடுவார்; நகை செய்வார்; எல்லோரும் தன்னையே பார்க்குமாறு குதிப்பார்; ஓடுவார்; மீள்வார்; கூடையை தண்ணீரில் போட்டு அதனை எடுக்க வெள்ளத்தில் குதித்துத் தவிப்பதுபோல் நடிப்பார்; கரையேறுவார். வானத்தில் மண்ணில் பெண்ணில் மைந்தரில் பொருளில் ஆசையற்று, தானற்றுத் தண்னையும் அற்ற யோகியர் ஞானக்கண் கொண்டேயன்றி நாடரும்ஜோதி, மண்ணோர்

ஊனக்கண் கொண்டுங் காண உடன் விளையாடுவார். அருளினால் உலகெலாம் ஆக்கியும் அளித்தும் நீத்தும் பெருவிளையாடல் செய்யும் பிறைமுடிப் பெருமான் இவ்வாறு ஒரு விளையாடல் செய்ய, ஓச்சுகோற் கையராகி அருகு நின்று ஏவல் கொள்வார் அடைகரை காணவந்தார். எல்லாப் பங்கும் அடைபட்டிருக்கின்றன. வந்தி பங்குமட்டும் அடைபடவில்லை. வந்திக்குக் கூலியாளாய் வந்தவன் யார்? என்றோடி, மன்மத மேனியாய் விளங்கும் பெருமானை நோக்கி, "அந்தப் பங்கெல்லாம் அடைபட்டனவே? ஏன் நீ இந்தப் பங்கையடைக்காமல் வாளா கிடக்கின்றனை? என்று வினாவினார். விரிசடைப் பெருமான் சிரித்தனர். இவன் என்ன பித்தனோ? பேய் பிடித்த மத்தனோ? வந்தியை ஏமாற்ற வந்த எத்தனோ? இந்திரஜாலம் காட்டும் சித்தனோ? இவன் யாரோ? தெரியவில்லையே" என்று திகைத்தார்கள்.

அரிமர்த்தன பாண்டியன் கரை காண வருகிறார். அமைச்சர் பலர் புடைசூழ்ந்து வருகின்றனர். ஏவலர் வெண்சாமரையிரட்டுகின்றனர். கரையைக் காண்பாராகி வந்த காவலன் வந்தியின் பங்கைக் கண்டார். "ஏன் இந்தப் பங்கு அடைபடவில்லை" என்று கேட்டார் மன்னர். கண்காணிப்பாளர், "மன்னரேறே! இது வந்தியின் பங்கு அவள் ஒரு ஆளை வைத்தனள். அந்த ஆள் இதனை அடைக்காமல் உன்மத்தனைப்போல இருக்கின்றான்" என்றார். "எங்கே அவன்" என சீறினார் மன்னர்.

*வள்ளல்தன் சீற்றங் கண்டு மாறுகோற் கைய ரஞ்சித்*
*தள்ளரும் சினத்த ராகித் தடக்கைதொட் டீர்த்துப் பற்றி*
*உள்ளொடு புறங்கீழ் மேலா யுயிர்தொறும் ஒளித்து நின்ற*
*கள்வனை இவன்தான் வந்தி ஆளெனக் காட்டி நின்றார்.*

எங்கும் நிறைந்து ஒளிந்திருக்கும் கள்வனை ஈர்த்துக்கொண்டு போய் இவன்தான் வந்தியின் ஆள் என்று காட்டினார்கள்.

*கண்டனன் கனன்று வேந்தன் கையிற்பொற் பிரம்பு வாங்கி*
*அண்டமும் அளவி லாத வுயிர்களும் ஆக மாகக்*
*கொண்டவன் முதுகில் வீசிப் புடைத்தனன் கூடை யோடு*
*மண்டனை உடைப்பிற் கொட்டி மறைந்தனன் நிறைந்த சோதி*

எல்லா உலகங்களையும் எல்லா உயிர்களையும் தனக்கு உடம்பாக உடைய எம்பிரானைப், பிரம்பால், பாண்டியன் முதுகில் ஓங்கி அடித்தான். அந்த அடி எல்லா உயிர்கள் மீதும், எல்லாப் பொருள்கள் மீதும் பட்டது. அவர் எங்கும் நிறைந்தவர் அல்லவா? எம்பிரான் மறைந்தார். வந்திக்கு காட்சியளித்தார். கைலையில் அவளைச் சேர்த்தருளினார். பாண்டியனுக்கு அசரீரியாக அருள் புரிந்தார்.

*பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்*
*பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்*
*விண் சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்*
*கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை*
*மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு*
*புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.*

*-திருவாசகம்-*

**சத்தியத்தை உணர்வதற்கு உதவக்கூடிய கருவிகள் அன்பும் அகிம்சையுமே.**

உ

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதிக்கு மீசாலை மண்ணில் இடம்பெற்ற பெருவிழா

**திரு ம. மயூரன் அவர்கள்**

கந்தரநுபூதி, முருக மந்திரத்திற்கு ஒப்பான நூல். அருணகிரியாரின் வாழ்வியல் அனுபவங்களையும் முருகன் பெருமைகளையும் செப்பும் அரிய நூல்.

"கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன
எந்தையருள் நாடி இருக்கும் நாள் எந்நாளோ?" எனத் தாயுமானவ சுவாமிகளே மதிப்புரை வழங்குகின்ற புனித நூல். அழகு தமிழில் அமைந்த ஐம்பத்தொரு பாடல்கள் அநுபூதியை அணி செய்கின்றன.

இத்தகைய பெருமை பெற்ற நூலைக் கடந்த பன்னிரண்டு வருடங்களாக, மின்னாமல் முழங்காமல் பக்கவாத்திய சகிதம் படித்து பயன்பெறும் அடியவர் திருக்கூட்டம் ஒன்று கந்தரநுபூதிக்கு விழா எடுத்தது. மீசாலை சித்திரவேலாயுதர் சுவாமி கோவிலில் தொடர்ச்சியாக இடம்பெறும் கந்தரநுபூதியோதலின் 100 ஆவது மண்டல பூர்த்தியைக் (ஒரு மண்டலம் என்பது 45நாள்கள்) கந்தரநுபூதிப் பெருவிழாவாகக் கொண்டாட வேண்டுமென்ற கனவு கடந்த மாத நிறைவில் நனவாகியது. இவ்வாலயத்தில் இளையோர் செயற்பாடுகள் அதிகமாயிருப்பதைக் கண்கூடாகக் காணமுடிந்தது. இவர்தம் செயல்களின் இளையாமைக்கு இதுவும் ஒரு காரணமோ? என எண்ணத் தோன்றியது.

ஆலயத்தின் மூலவராக விளங்கும் சித்திர வேலாயுத சுவாமிக்கு இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அருணகிரியாரின் திருவுருவப்படத்திற்கு பூசை இடம்பெற்றது. தொடர்ந்து கந்தரநுபூதி பாராயணம் ஆரம்பமாகியது. தென்மராட்சியின் அந்தண சிரேட்டர்களாக விளங்கும் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள், சிவஸ்ரீ. கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் உள்ளிட்ட சிவாச்சாரியப் பெருமக்களும் கந்தரநுபூதிக் கூட்டு வழிபாட்டில் பங்கு கொண்டமை காண்போர் உள்ளங்களில் புதுத் தெம்பை உண்டுபண்ணியது.

"ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே" அநுபவித்துப் பாடிய அன்பர்களின் கண்களில் கண்ணீர் முத்துக்கள்.

அருணகிரியாரின் திருவுருவம், அருகில் விழா நடைபெறும் திருப்புகழ் மண்டபத்திற்கு எழுந்தருளும் நிகழ்வு ஆரம்பமாகியது. மீண்டும் கந்தரநுபூதி இசை முழக்கம். ஆலயத் திருவீதியில் அமைந்திருந்த திருப்புகழ் மண்டபம் விசேட அலங்காரங்களைப் பெற்றிருந்தது. காலை 9 மணிக்கே, மண்டபத்தின் கீழ்த் தளம் அநுபூதியன்பர்களால் நிறைந்திருந்தமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அநுபூதி மணங்கமழ அருணகிரியார் மேடையில் எழுந்தருளினார். விழாக்குழுத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. மங்கல விளக்கேற்றல் இறை வணக்கம் முதலிய சம்பிரதாயங்களைத் தொடர்ந்து ஆசியுரைகள் ஆரம்பமாயின. திருக்கணித பஞ்சாங்கக் கணிதரும் ஆலயப் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள், சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள் ஆசியுரைகளை நல்கினர். நல்லைக் குருமணி இந்தியா சென்றமையால் அவர் வழங்கிய

ஆசியுரை சபையில் வாசிக்கப்பெற்றது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தைச் சேர்ந்த அபிவிருத்தி உதவியாளர் செல்வி சீ.மகிந்தினி வாழ்த்துரை நல்கினார்.

கந்தரநுபூதி கையடக்க நூலை ஆலயத்தின் சார்பில் சமாதான நீதிவான் கே.யோகநாதன் இலவசமாக வெளியிட்டு வைத்தமையைத் தொடர்ந்து சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் கந்தரநுபூதி உரையரங்கு ஆரம்பமானது. பாடும் பணியே பணியாய் அருள்வாய் என்ற பொருளில் சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசனும், குருவாய் வருவாய் அருள்வாய் குகனே என்ற பொருளில் சைவப் புலவர் சி.கமலநாதனும் கருத்துரைகளை வழங்கினர். நிறைவுரையினை சிவத்தமிழ் வித்தகர் ஆற்றினார். நடைமுறை வாழ்வியலோடு கந்தரநுபூதியை இணைத்து உரையரங்கு இடம்பெற்றமை சபையோரைப் பெரிதும் கவர்ந்தது.

முருகன் பெருமைகளைப் பரப்புரை செய்யும் நோக்கில் ஆலயத்துக்கென இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்யும் வைபவமும் இடம்பெற்றது. சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் முன்னாள் அதிபர் இ. நாகேந்திரராஜா இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவிகள் வழங்கிய இன்னிசைக் கச்சேரியும் விழாவுக்கு அணி சேர்த்தது.

கந்தரநுபூதிக்கெனத் தனிப்பெரும் விழா எடுத்தமை குடாநாட்டின் அண்மைக்கால வரலாற்றில் இதுவே முதன்முறையென எண்ணத் தோன்றுகிறது. இம்முயற்சி இனிவருங்காலங்களிலும் தொடரப்பெற வேண்டும். அவலங்கள் நிறைந்த எம்மவர் மண்ணிற்கு அநுபூதி மணம் தரும் ஆனந்த சுகாநுபவம் ஆறுதலை ஏற்படுத்தும்.

(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| A.V. முருகையா | அவுஸ்திரேலியா | 50000. 00 |
| K. கமலநாதன் | கொழும்பு | 1மூடை அரிசி |
| திருமதி குணநாயகி நடராசா | வன்னியசிங்கம் வீதி தாவடி | 5000. 00 |
| கிருஸ்ணமூர்த்தி தீபா | நீர்வேலி தெற்கு | 3புட்டி அரிசி 1000. 00 |
| T. குகன் நாச்சிமார் கோவிலடி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| K. சண்முகவதனி | நாவலப்பிட்டி | 1000. 00 |
| க. சிவராசா கோவிற்கடவை | துன்னாலை | 2000. 00 |
| செல்லையா ஸ்ரீதரன் உச்சில் ஒழுங்கை கரவெட்டி | | 1000. 00 |
| க. ஸ்ரீஸ்கந்தராசா (பிரதி அதிபர்) | இடைக்காடு | 2000. 00 |
| சுந்தரலிங்கம் சுதர்சன் | துன்னாலை மத்தி | 5000. 00 |
| தி. பாலசிங்கம் மருந்தாளர் | சிவசக்தி கோவிலடி அச்சுவேலி | 1000. 00 |
| சரவணமுத்து லோகநாதன் (இலண்டன்) | வடலியடைப்பு | 37000. 00 |
| A. மகாலிங்கம் | வத்தளை | 4500. 00 |
| ப. கீதப்பிரியன் | தெகிவளை | 1000. 00 |
| திருமதி நேசரெட்ணம் | | 30000. 00 |
| தேவன் ஸ்ரோர்ஸ் | ஆவரங்கால் | 2மூடை அரிசி, 1புட்டி பருப்பு |
| மோகன் கடை | ஆவரங்கால் | 1மூடை அரிசி, 1புட்டி பருப்பு |

(தொடரும்...

**அவனவன் விதி அவனவன் கையில் இருக்கிறது.**

உ

# சந்நிதியான்

## திரு ந. அரியரத்தினம் அவர்கள்



மூத்த பூசகரான க. ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் எதிர்வரும் 06.05.2007 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கின்ற தனது தினப்பூசைக்குரிய முன் ஆயத்தங்களில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அதன் ஓர் அங்கமாக அன்றைய பூசை தினத்தில் இடம்பெறவேண்டிய பூசைகள் விஷேட அபிஷேகங்களுக்குத் தேவையான தானியங்கள், பழவகைகள், அபிஷேகத்திரவியங்கள் போன்ற அனைத்துப் பொருட்களையும் வழமைபோல அயல் கிராமமான உடுப்பிட்டியில் கொள்வனவு செய்வதென்று தீர்மானித்தார்கள்.

இத்தகைய முன் ஆயத்தங்களுக்கு மத்தியில் இன்னொரு விடயமும் அவருடைய உள்ளத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. ஆம் தனது தினப்பூசை நடைபெறுகின்ற அந்த மாலைப் பூசை நேரத்தில் தான் நிறைவேற்ற விரும்பிய அந்தச் செயற்பாட்டையும் நிறைவு செய்துவிட வேண்டுமென்பதிலும் ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் கவனமாக இருந்தார்கள்.

அவரது தினப்பூசைக்கு இன்னும் இரண்டு தினங்கள் மட்டுமே இருந்த நிலையில் ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் தான் திட்டமிட்டதுபோல உடுப்பிட்டிச் சந்தைக்கு சென்று அங்கே பூசைகளுக்கும், அபிஷேகங்களுக்கு உரியதான பல்வேறு பொருட்களையும் கொள்வனவு செய்து கொண்டிருந்தார்கள். அதேநேரம் அன்றையதினம் மாலைப்பூசையின் பொழுது சந்நிதியானுக்கு நைவேத்தியமாகப் படைத்து தனது விருப்பத்தை நிறைவு செய்யவேண்டுமென்பதற்காக தான் வாங்க நினைத்த அந்தப் பொருளை வாங்குவதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் உடுப்பிட்டிச்சந்தை முழுவதும் தேடியநிலையிலும் அந்தப்பொருள் அங்கே கிடைக்கவில்லை. இருந்தபோதும் ஆறுமுகசாமி ஐயர் மனம் தளரவில்லை.

குறிப்பிட்ட இந்தப் பொருளை வாங்குவதற்காக அடுத்தநாளும் உடுப்பிட்டிச் சந்தைக்கு வரவேண்டியிருக்கிறதே என ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் தனக்குள் சிந்தித்துக்கொண்டார்கள். இருந்த போதிலும் தான் நினைத்த செயற்பாட்டை எப்படியும் நிறைவேற்றிவிட வேண்டுமென்பதற்காக மீண்டும் அடுத்த நாள் உடுப்பிட்டிச் சந்தைக்கு சென்றார்கள். ஆனாலும் அவ்வாறு சென்றும் பயன்கிடைக்கவில்லை. காரணம் அன்றும் அந்தப் பொருள் சந்தைக்கு வரவில்லை.

ஆம் ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் 06.05.2007 ஞாயிற்றுக்கிழமை சாயரட்சைப் பூசையின்பொழுது சந்நிதியானுக்கு நைவேத்தியமாகப் படைக்கவிரும்பியது இராசவள்ளிக்கிழங்கினால் தயாரிக்கப்பட்ட

பண்டமாகும். அதாவது இராசவள்ளிக் கிழங்குடன் தேங்காய்ப்பால், சுத்தமான கற்கண்டு என்பன சேர்த்து தயாரிக்கப்பட்ட இராசவள்ளிக்கிழங்குக் கழியாகும். அந்த இராசவள்ளிக்கிழங்குக் கழிக்கு அவசிய மான இராசவள்ளிக்கிழங்கை வாங்குவதற் காக ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் உடுப்பிட்டிச் சந்தைக்கு சென்றிருந்தார் கள். ஆனாலும் இரண்டு நாட்களும் இராச வள்ளிக்கிழங்கு கிடைக்காதது ஆறுமுக சாமி ஐயர் அவர்களுக்கு பெரும் ஏமாற்ற மாக அமைந்திருந்தது.

தேவையைப் பொறுத்து தமது விருப்பத்தைப் பொறுத்து பூசகர்கள் சந்நிதியானுக்கு இராசவள்ளிக்கிழங்குக் கழியினை நைவேத்தியமாகப் படைக் கின்ற வழக்கம் சந்நிதியில் கடைப்பிடிக் கப் பட்டுவருகிறது. அந்தவகையில்தான் ஆறுமுகசாமி ஐயரும் இராசவள்ளிக் கிழங்குக் கழியினைப் படைப்பதற்கு முடிவுசெய்திருந்தார்கள். ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் இவ்வாறு முடிவுசெய் வதற்கு இன்னுமொரு காரணமும் இருந் தது. அதாவது இராசவள்ளிக்கிழங்குக் கழியினை சிறிது தாராளமாக தயார் செய்து அதனை ஆலயமே தஞ்சமென ஆலயத்தில் தங்கியிருக்கின்ற அடியார் களுக்கு வழங்கவேண்டுமென்ற ஒரு விருப் பமும் அவருக்கு இருந்தது. ஆனால் உடுப்பிட்டிச் சந்தையில் இராசவள்ளிக் கிழங்கு கிடைக்காததால் இந்த விருப் பங்கள் எல்லாம் நிராசைகளாக மாறிவிடப் போகின்றனவோ என்றுதான் ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் கவலை அடைந்தார்கள்.

ஆனாலும் ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் இப்பொழுதும் மனம் தளர வில்லை. அவருடைய தினப்பூசைக்கு இன்னும் ஒருநாள் இடைவெளி இருந்தது. ஆகவே அந்த ஒருநாள் இடைவெளியில் நெல்லியடிச்சந்தையிலேனும் அதனை வாங்கிவிடமுடியும் என்பது அவருக்கு ஆறுதல் அளித்தது.

தொண்டைமானாற்றின் பிரதான வீதியில் அமைந்துள்ள பழனிகடை என்பது தற்பொழுது பிரபல்யமான கடை. பழனி கடையில் பலசரக்குப் பொருட்களுடன் மரக்கறி வகைகளும் விற்பனை செய்யப் படுகிறது. இதனால் அந்தப் பழனிகடை உரிமையாளர் மரக்கறிச் சாமான்களை வாங்குவதற்காக தினமும் காலையில் நெல்லியடிச் சந்தைக்கு சென்றுவருவது வழக்கம். இதனால் பழனிகடை உரிமை யாளருடன் நன்கு பழக்கமான ஆறுமுக சாமி ஐயர் அவர்கள் பழனிகடை உரிமை யாளர் மூலம் நெல்லியடிச் சந்தையில் இராசவள்ளிக்கிழங்கினை பெற்றுக்கொள் வதற்கு முடிவுசெய்து அதற்கான ஒழுங் கினையும் மேற்கொண் டார்கள். இதனால் ஆறுமுகசாமி ஐயருடைய மனதில் தற் பொழுது நின்மதியும் நிறைவும் தோன்றி யது.

ஆறுமுகசாமி ஐயர் தனது தினப் பூசை தொடர்பாகவும், அன்றைய தினம் சாயரட்சைப்பூசையின் பொழுது படைக் கப்படவேண்டிய நைவேத்தியம் தொடர் பாகவும் இவ்வாறு செயற்பட்டுக்கொண் டிருக்கின்ற அதேவேளை இவரது வீட்டி லும் இன்னொரு முக்கியமான சம்பவம் நடந்தேறியது. இவரது இரண்டாவது மகள் விஜயதர்சினி சந்நிதியான் தொடர்பாக கனவினைக் காணநேர்ந்தது. இவ்வாறு தான் கண்ட கனவினை தனது பெற் றோருக்கும் விஜயதர்சினி வெளிப்படுத் தினார்கள்.

சந்நிதியான் ஒரு வயதுமுதிர்ந்த கிழவனது வடிவத்தில் வந்து விஜயதர்

சினியிடம் தனக்கு பசிக்கிறது தனது பசியினைப்போக்குமாறும் கேட்டுள்ளார்கள். அதுமட்டுமன்றி தனக்கு பிட்டு விருப்பமாக இருக்கிறதென தனது விருப்பத்தை வெளிப்படுத்தும் வகையிலும் அந்த கனவின் நிகழ்வுகள் அமைந்திருந்ததை விஜயதர்சினி தனது குடும்பத்தினருக்கு எடுத்துக்கூறினார்கள்.

தன்னுடைய தந்தையாருடைய தினப்பூசை இடம்பெற உள்ள நிலையில் இவ்வாறு சந்நிதியான் தனக்கு பிட்டு விருப்பமாக இருக்கிறது என கனவில் வெளிப்படுத்திய அந்தக் காட்சி விஜய தர்சினி அவர்களுடைய உள்ளத்தில் மிகவும் ஆழமாகப் பதிந்துவிட்டது.

இவ்வாறு சந்நிதியான் வெளிப் படுத்திய அந்தக் கனவுக்காட்சியினால் கட்டுண்ட விஜயதர்சினி தன்னுடைய தந்தையாருடைய தினப்பூசை நடைபெறும் நாளில் மாலைப்பூசையின்பொழுது சந்நிதி யானுக்கு அவன் விரும்பியதுபோல பிட்டை நைவேத்தியமாகப் படைக்கவேண்டு மென்று தனக்குள் முடிவு செய்துகொண் டார்கள். அதுமட்டுமன்றி அவ்வாறான அந்த முடிவினை தனது பெற்றோருக்கும் வெளிப்படுத்தினார்கள்.

தனது மகள் விஜயதர்சினி யினுடைய இவ்வாறான வேண்டுகோள் உண்மையில் ஆறுமுகசாமி ஐயருக்கு ஒரு குழப்பமான நிலையை தோற்றுவித்து, இராசவள்ளிக்கிழங்குடன் சுத்தமான கற் கண்டு கலந்து தேங்காய்ப்பால்விட்டு காய்ச்சிய இனிப்புச்சுவை நிறைந்த இராச வள்ளிக்கிழங்குக் கழியினை சந்நிதி யானுக்கு நைவேத்தியமாகப் படைக்க வேண்டுமென்று தான் சிந்தித்திருந்த நிலையில் இப்பொழுது பிட்டினை சந்நிதி யானுக்கு நைவேத்தியமாகப் படைக்க வேண்டுமென்று அவரது மகள் விருப்பப் படுவதால் சந்நிதியானுக்கு எதனை நைவேத்தியமாகப் படைப்பதென்று ஆறு முகசாமி ஐயருக்கு ஒரு தர்ம சங்கடமான நிலைதோன்றியது.

மருதர் கதிர்காமர் பரம்பரையில் வந்த 69 வயது நிரம்பிய மூத்த பூசகரான ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் ஏற்கனவே சந்நிதியானது இதுபோன்ற பல திருவிளை யாடல்களை அனுபவித்தவர். இதனால் தானாக எந்தமுடிவினையும் அவர் அவ சரப்பட்டு எடுக்க விரும்பவில்லை. நாரதர் கலகத்தை ஏற்படுத்துவதுபோல சந்நிதி யானும் தங்கள் வீட்டில் கலகத்தை ஏற் படுத்தியுள்ளதை ஆறுமுகசாமி ஐயர் உணர்ந்து கொண்டார்கள் சந்நிதியான் ஏற்படுத்திய கலகத்தை அவனே முடித்து வைக்கட்டும் எனவும் முடிவு செய்தார்கள்.

இதனால் பிட்டு படைக்கப்பட வேண்டுமென்ற தன்னுடைய மகளது விருப்பத்தை ஆறுமுகசாமி ஐயர் ஏற்றுக் கொள்ளவுமில்லை. நிராகரிக்கவுமில்லை. அதேபோன்று நெல்லியடிச்சந்தையில் பழனிகடை உரிமையாளரும் இராசவள்ளிக் கிழங்கை கொள்வனவு செய்வது தொடர் பாக அவர்செய்த ஏற்பாட்டிலும் எந்தவித மாற்றத்தையும் அவர்செய்ய விரும்ப வில்லை.

06.05.2007 ஞாயிற்றுக்கிழமை சாயரட்சப் பூசையின்பொழுது என்ன நைவேத்தியம் சந்நிதியானுக்கு படைக் கப்பட்டது. சந்நிதியானது திருவுள்ளம் எப்படி அமைந்தது? என்பதை எல்லாம் அடுத்த மலரில் அடியார்களுக்கு வெளிப் படுத்துகின்றோம்.

(தொடரும்....

உ

# வாசகர் உள்ளத்திலிருந்து

முதற்கண் சந்நிதிவேற் பெருமானுக்கு நன்றிகூறிக்கொண்டு, ஐயாவுக்கும் எனது வணக்கம். எனது வேண்டுதலை ஏற்று தைமாதம் தொடக்கம் "ஞானச்சுடர்" என்ற அற்புதமான நூலை அனுப்பிவைத்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி. மேலும் முருகனே நேரில் தந்ததுபோல அவரது விபூதி பிரசாதம். இவற்றைப் பெறவும் நாம் புண்ணியம் செய்யவேண்டும்.

புண்பட்டு இருக்கும் எனது மனதுக்கு இப்புத்தகத்திலுள்ள ஒவ்வொரு வாசகமும் எனது மனத்தை ஆறுதல்ப்படுத்துவதாக உள்ளது. முருகனே என்னுடன் இருப்பதை நான் உணர்கின்றேன். இந்நிலை ஏற்பட காரணமான சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு நான் என்றைக்கும் கடமைப்பட்டவளாக இருப்பேன்.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடக்கும் சமய, சமூக பணிகளுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள். எல்லா அன்பர்களைப்போல நானும் சந்நிதியானுக்கு என்னாலான பணி செய்யவேண்டும் என்று முருகனை அனுதினமும் பிரார்த்திப்பேன். தொடர்ந்து ஞானச்சுடரை அனுப்பிவைத்து உதவுமாறு தயவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

*செல்வி செ. ஜடா*
*புலோலி.*

கடந்த 10 ஆண்டுகளும் தொடர்ந்து 118 மலர்களையும் வாசித்துப் பயனடைந்து வந்துள்ள பல அன்பர்களில் நானும் ஒருவன். புராண, இதிகாச, சாஸ்திர, ஆத்மீக, சமய நிகழ்வுகள் பற்றிய கட்டுரைகளுடன் ஐப்பசிமாத 2007 இதழில் "பாரதியார் போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமி யார்?" என்ற கட்டுரை இலங்கை, இந்தியா ஏன் தமிழர் வாழும் தேசமெங்கும் ஆர்வத்தையும் சிந்தனையையும் தூண்டக்கூடியது என்பது எனது தாழ்மையான எண்ணம்.

*திரு சி. கணேசன் அவர்கள்.*
*மீசாலை.*

தங்கள் பேரவையினால் கடந்த 10 வருடங்களாக வெளியிடப்பட்டு வருகின்ற ஞானச்சுடர் மலரானது தொடர்ந்தும் தனது பணியினை சிறப்பாக தொடர்வதற்கு இறைவனை வேண்டுவதோடு வாழ்த்துக்களையும் கூறுகின்றேன்.

இம்மலரினை நாம் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வாசிப்பதன்மூலம் அறியப்படாத பல விடயங்களை அறிந்துகொள்வதோடு எமது தேடல் ஆற்றலையும் வளர்த்துக்கொள்ளமுடியும். எனவே இம்மலரானது தொடர்ந்தும் வெளிவர வாழ்த்துவதோடு 2008ஆம் ஆண்டிற்குரிய மலரினை பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன் என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

"வாழ்க என்றும் உங்கள் பணி"

*திரு க. ஜெயபாலகணேசன்.*
*நீர்வேலி.*

பொய் சொல்லாதே அது உன் வாழ்க்கையையே பொய்யாக்கிவிடும்.

உ

# பூவும் பூஜையும்

ப. அருந்தவம் அவர்கள்

இறைவனை நாம் பூக்களைக்கொண்டு அர்ச்சித்து வழிபாடு செய்கிறோம். பூக்களினால் செய்யப்படுவது அதாவது பூ + செய் என்பது பூசெய் என்ற பொருளில் வழங்கப்பட்டு பின்னர் அதுவே பூசை என்றும் பூஜை என்றும் மருவிவிட்டது.

**இறைவனிற்குகந்த பூக்கள்**

ஒவ்வொரு கடவுளரையும் பூஜிக்க உகந்த பூக்கள் உண்டு அவை

| | |
|---|---|
| விநாயகர்- | எருக்கம்பூ, செம்பருத்தி, தாமரை, றோஜா |
| முருகன் - | மல்லிகை, முல்லை, சாமந்தி, காந்தள், றோஜா |
| அம்பிகை - | வெண்தாமரை, மல்லிகை, முல்லை, சூரியகாந்தி, செம்பருத்தி, செம்பவள மல்லிகை |
| சிவன் - | தும்பை, தாமரை, சங்குப்பூ, செம்பருத்தி |
| திருமால் - | தாமரை, பவளமல்லிகை, மருக்கொழுந்து |

சில பூக்கள் சில கடவுளுக்கு உகந்தவையல்ல. அவை

| | |
|---|---|
| திருமால் - | எருக்கம்பூ, ஊமத்தம்பூ |
| பரமசிவன் - | தாழம்பூ |
| இலக்குமி - | தும்பை |
| வைரவர் - | மல்லிகைப்பூ |
| சரஸ்வதி - | பவளமல்லிகை |

இறைவனைப் பூஜிக்கப்பூக்கள் பயன்படுவதுபோல பத்திரங்களும் (இலைகள்) பயன்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு இறைவனையும் பிரார்த்திப்பதற்குகந்த இலைகள் உண்டு. அவை முறையே

| | |
|---|---|
| சிவன் - | வில்வம் இலை |
| திருமால் - | துளசி இலை |
| அம்மன் - | வேப்பிலை |
| பிரம்மா - | அகத்தி இலை |
| கங்காதேவி - | மாவிலை |
| விநாயகர் - | அறுகம்புல் |

இவ்வாறாக இறைவனிற்குப் பிரியமான பூக்களையும், இலைகளையும் தரும் மரங்களை எமது பிரதேசத்தில் நாட்டி இறைவனை மகிழ்விப்பதுடன் சூழலுக்கும் எம்மால் இயன்ற நன்மைகளைச் செய்வோமாக.

**கடவுளை வணங்கு அவர் உனக்கு எப்போதும் கைகொடுப்பார்.**

உ

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருவானைக்கா

திருச்சிக்கு அருகே, காவேரியின் வடகரையில், ஸ்ரீரங்கத்திலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் உள்ளது திருவானைக்கா. யானை வழிபட்டதால் "ஆனைக்கா" என்றும், ஜம்பு மரத்தடியில் பரமன் எழுந் தருளியிருப்பதால் "ஜம்புகேஸ்வரம்" என்றும், பஞ்சபூத ஸ்தலங்களுள் நீர் ஸ்தல மாகையால் "அப்புக்ஷேத்திரம்" என்றும், அம்பாள் ஐயனைத் தொழுதலால் "ஞான க்ஷேத்திரம்" என்றும் பல பெயர்கள் இத் தலத்திற்கு உண்டு.

யானை- சிலந்தி கதை அனை வரும் அறிந்ததே. கிரியைத் தொண்டு செய்த யானை மோட்சமெய்தியமையை யும் சரியைத்தொண்டு செய்த சிலந்தி மறுபிறவியில் கோச்செங்கட் சோழனாகப் பிறந்து திருவானைக்கா உட்பட 70 கோயில்கள் கட்டியமையையும் வரலாறு கூறுகிறது.

ஐந்து பிரகாரங்கள் கொண்ட இத் திருக்கோயிலின் 4ஆவது 5ஆவது சுற்றில் வீடுகள் அமைந்துள்ளன. 4ஆவது சுற்றில் உள்ள திருமதில் "நீறிட்டான் மதில்" எனப்படுகிறது. 32அடி உயரம், 8000அடி நீளம், 5½ அடி அகலம் கொண்டது இந்த நீறிட்டான் மதில். சுவர் கட்டிய வேளை யில் இறைவனே ஒரு சித்தராக வந்து கூலியாட்களுக்குக் கூலியாக திருநீற் றையே கொடுத்ததாகவும், திருநீறு பொற் கட்டியாக மாறியதாகவும் ஸ்தல புராணம் கூறுகிறது.

மேற்கு வாசல் வழியாக உள்ளே நுழைந்து மூன்று கோபுர வாயில்களையும் தாண்டியபின் படிப்படியாகப் படிகளில் கீழிறங்கிச் சென்றால் நேராக மூலவர் தரிசனம். ஒன்பது துவாரங்கள் கொண்ட ஒரு சிறிய கல் யன்னல் வழியாக ஜம்பு கேஸ்வரர் தரிசனம் கிடைக்கிறது இந்தச் சாளரம் "திருச்சாலகம்" எனப்படுகிறது. "சேவிக்கும் எல்லைத் திருச்சால் கதவ மும்" என திருவானைக்கா புராணம் கூறு கிறது. ஒன்பது வாயில்கள் கொண்ட மனித உடல் மாண்டுபோய் கழுகுக்கு இரையாகிப் போவதற்கு முன், சாளரத்தின் வழியாக ஆனைக்கா அண்ணலைத் தொழுதால் உய்யலாம் என நாவுக்கரசர் இவ்வாறு பாடுகிறார்.

ஒழுகு மாடத்துள் ஒன்பது வாய்தலும்
கழுகு உரிப்பதன் முன்னம் கழலடி
தொழுது கைகளால் தூமலர் தூவிநின்று
அழும் அவர்க்கு அன்பன் ஆனைக்கா அண்ணலே!

ஒரு சதுரபீடத்தின்மேல், சிறிய லிங்கமானாலும் சிந்தையைக் கட்டி நிறுத்தும் செல்வத் திருமேனியாக மூலவர் ஜம்புகேஸ்வரர் மேற்கு பார்த்தபடி அருள் பாலிக்கிறார். பக்கவாட்டில் உள்ள சிறிய வாசல் வழியாக குனிந்தபடி (ஒரு நேரம் ஒருவர் மட்டுமே உட்புகலாம்) கருவறை யின் உள்ளே போகவேண்டும்.

கருவறையில் எப்போதும் நீர் கொப் பளித்து ஊறிக்கொண்டேயிருப்பதனால்

மனச்சாட்சிக்கு துரோகம் இழைப்பவன் மிருகத்தை விடக் கொடியவன்.

கருவறைச் சுற்றாடல் முழுவதும் எந்த வெப்ப காலத்திலும் ஜில்லென குளிர்ந்த படியேயிருக்கும். அரை கி.மீ. தூரத்தில் உள்ள காவேரியின் நீர் மட்டம் உயரும் போது கருவறையினுள் சதுரபீடம்வரை நீர்மட்டம் உயர்வதை நாமும் பார்க்க முடிகிறது. அர்ச்சகர்களும் இதனை உறுதிப் படுத்துகிறார்கள்.

உச்சிக்கால வேளையில் நடைபெறும் கோமாதா பூசையும், அர்ச்சகர் அம்பிகைபோன்று வேடமணிந்து இறைவனைப் பூசிப்பதுவும் அற்புதமான தினசரி நிகழ்ச்சி. பங்குனிச் சித்திரை நாளன்று ஜம்புகேஸ்வரர் அம்பிகை வேடமிடுவார். அம்பிகையோ ஐயன் வேடமிடுவார் தலத்தின் ஐந்து பிரகாரங்களிலும் இருவரும் உலாவரும் இவ்விழா "பஞ்சப் பிரகார விழா" என்றும், "ஐந்து திருச்சுற்றுப் பெரு விழா" என்றும் அழைக்கப்படும். இந்த உற்சவம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உன்னத விழாவாகும்.

கிழக்குப் பார்த்தபடி தனிக்கோயில் கொண்டருளும் அம்பிகை அகிலாண்டேஸ்வரி என்றும் கன்னியாகவே கருதப்படுவதனால் இங்கு திருக்கல்யாண உற்சவம் எதுவும் நடைபெறுவதில்லை. சாதாரண கோயிற் பரிசாதகராக இருந்த வரதன் அன்னையின் அருளால் கவிகாளமேகமாக மாறிய வரலாறு அம்பிகையின் இந்த வெளிமண்டபத்திலேதான் நடைபெற்றது.

பரந்து விரிந்திருக்கின்ற பெரு வீதிகள் யாவும் நிலமட்டத்துக்குக்கீழே இருந்த போதிலும் விழுகின்ற மழைநீர் அவ்வளவும் வாய்க்கால்கள் வழியாக வடிந்து ஓடித் தூரத்தே உள்ள ஒரு குளத்துக்குப் போய்ச்சேரும்படியாகக் கருங்கல்லினாலான வடிகால் அமைப்புக்களை அந்தக் காலத்திலேயே திறமையாகச் செய்துள்ளமை பெருவியப்பைத் தருகிறது.

பி.கு: சிலந்தியும்- யானையும் இறைவனை வணங்கி மோட்சம் பெற்ற சரித்திரம் நடைபெற்ற இடம்.

"ஏரானைக் காவிலுறை என்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றதனைப் போற்றினால்- வாராத
புத்தி வரும் பத்தி வரும் புத்திர உற்பத்தி வரும்
சக்தி வரும் சித்தி வரும்தான்"

-காளமேகம்-

---

எப்படித்தான் பொறுப்பதையா துயரை
எப்படித்தான் சகிப்பதையா
எதற்குமோர் எல்லை இருக்கும் என்பார்கள்
இதற்குமோர் எல்லை இன்னுமேன் இல்லை ஐயா
எண்ணிய கருமம் எல்லாம் எளிதில் முடித்திடுவாய்
எண்ணற்ற ஏழைகள் பசி எளிதில் தீர்த்திடுவாய்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் சந்நிதிவேலவா
என் கண்கண்ட தெய்வம் நீயல்லவோ சந்நிதி வேலையா
இத்துயர் தீருமையா.

*திரு ஐ. அரசபிள்ளை அவர்கள்.*

---

**அன்பின் அறிகுறி என்ன தெரியுமா? இடைவிடாத முயற்சிதான்.**

# வைகாசிமாத வாராந்த நிகழ்வுகள்

02-05-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "விக்கினந் தீர்க்கும் விநாயகப் பெருமான்"

**வழங்குபவர்:-** திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

---

09-05-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**விடயம்:-** "பக்தி இசை நிகழ்வு"

**வழங்குபவர்:-** ஆவரங்கால் சஹானா இசைக் கலைஞர்கள்

---

16-05-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**வருடாந்த வைகாசிப்பெருவிழா**

**சிறப்பு நிகழ்வு:-** இராமநாதன் கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்வு

---

23-05-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "பெரியபுராணம்" (தொடர்)

**வழங்குபவர்:-** அ. குமாரவேல் (சிரேஷ்ட விரிவுரையாளர்)
(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

30-05-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 125ஆவது மாத வெளியீடு

## வைகாசி - 2008

**வெளியீட்டுரை:-** திரு சி. சிவபாலசிங்கம் G.S

**மதிப்பீட்டுரை:-** திரு செ. பரமேஸ்வரன்
(அதிபர்)

பதிவு இல. Q.D/60/NEWS/2008

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2008

## ஜனவரி

01.01.2008 மார்கழி 16 செவ்வாய்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
15.01.2008தை 1 செவ்வாய்
தைப்பொங்கள்
18.01.2008தை 4 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.01.2008தை 8 செவ்வாய்
தைப்பூசம் விசேட உற்சவம் பகல்

## பெப்ரவரி

14.02.2008மாசி 2 வியாழன்
கார்த்திகை உற்சவம்
21.02.2008 மாசி 9 வியாழன்
மாசி மகம்

## மார்ச்

06.03.2008மாசி 23 வியாழன்
மகாசிவராத்திரி விரதம்
விசேட உற்சவம் மாலை 7 மணி
12.03.2008மாசி 29 புதன்
கார்த்திகை உற்சவம்
18.03.2008பங்குனி 5 செவ்வாய்
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
21.03.2008பங்குனி 8 வெள்ளி
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமாள் கும்பாபிஷேக தினம்

## ஏப்ரல்

07.04.2008பங்குனி 25 திங்கள்
ஆலய கும்பாபிஷேக தினம்
சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
09.04.2008பங்குனி 27 புதன்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
13.04.2008சித்திரை 1 ஞாயிறு
தமிழ் இந்துப் புத்தாண்டு (சர்வதாரி)
மாலை 6.30 விசேட உற்சவம்
22.04.2008 சித்திரை 8 ஞாயிறு
சித்திரா பூரணை

## மே

06.05.2008 சித்திரை 24 செவ்வாய்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
19.05.2008 வைகாசி 6 திங்கள்
வைகாசி விசாகம், விசேஷட உற்சவம்

## ஜூன்

02.06.2008 வைகாசி 20 திங்கள்
கார்த்திகை உற்சவம்
30.06.2008 ஆனி 16 திங்கள்
கார்த்திகை உற்சவம்

## ஜூலை

03.07.2008 ஆனி 19 வியாழன்
கதிர்காமம் கொடி, பயணப்பூஜை
07.07.2008 ஆனி 23 திங்கள்
தீர்த்தமெடுப்பு
09.07.2008 ஆனி 25 புதன்
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
13.07.2008 ஆனி 29 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
14.07.2008 ஆனி 30 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
27.07.2008 ஆடி 12 ஞாயிறு
கார்த்திகை உற்சவம்

## ஆகஸ்ட்

01.08.2008 ஆடி 17 வெள்ளி
ஆடி அமாவாசை
23.08.2008 ஆவணி 7 சனி
கார்த்திகை உற்சவம்
30.08.2008 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு 2.15 கொடியேற்றம்

## செப்டெம்பர்

03.09.2008 ஆவணி 18 புதன்
காலைத்திருவிழா ஆரம்பம்
08.09.2008 ஆவணி 23 திங்கள்
பூங்காவனம்
09.09.2008 ஆவணி 24 செவ்வாய்
கைலாய வாகனம்
13.09.2008 ஆவணி 28 சனி
சப்பறம்
14.09.2008 ஆவணி 29 ஞாயிறு
தேர்
15.09.2008 ஆவணி 30 திங்கள்
காலை - தீர்த்தம்
மாலை - மௌனத் திருவிழா
22.09.2008 புரட்டாதி 6 திங்கள்
பிராயச்சித்த அபிஷேகம்
30.09.2008 புரட்டாதி 19 செவ்வாய்
நவராத்திரி விரதாரம்பம்

## அக்டோபர்

08.10.2008 புரட்டாதி 22 புதன்
சரஸ்வதி பூஜை
09.10.2008 புரட்டாதி 23 வியாழன்
விஜயதசமி
17.10.2008 ஐப்பசி 1 வெள்ளி
கார்த்திகை உற்சவம்
27.10.2008 ஐப்பசி 11 திங்கள்
தீபாவளி தினம்
29.10.2008 ஐப்பசி 13 புதன்
கந்தஷஷ்டி விரதாரம்பம்

## நவம்பர்

04.11.2008 ஐப்பசி 19 செவ்வாய்
சூரசங்ஹாரம்
05.11.2008 ஐப்பசி 20 புதன்
பாரணை, தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்
13.11.2008 ஐப்பசி 28 வியாழன்
கார்த்திகை உற்சவம்

## டிசம்பர்

11.12.2008 கார்த்திகை 26 வியாழன்
திருக்கார்த்திகை உற்சவம்
குமாராலய தீபம்
14.12.2008 கார்த்திகை 29 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை

**சுபமங்களம்**
**நன்றி**